
# தமிழோசை

அரும்பு - 01



வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,
நெளுக்குளம்,
வவுனியா.

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழோசை

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை ,
நேரியகுளம் வீதி ,
நெளுக்குளம்,
வவுனியா.

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

- சுப்பிரமணிய பாரதியார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பதிப்பு - 2019

பதிப்புரிமையுடையது.


- நூலின் பெயர் :- தமிழோசை
- இதழ் :- 01
- வெளியீட்டு ஆண்டு :- 2019
- வெளியீடு :- வவுனியா தெற்கு தமிழ் பிரதே சபை


**இவ்விதழ் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால்,**

**அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

தவிசாளர்,
கௌரவ. துரைச்சாமி நடராஜசிங்கம்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

**வழிகாட்டல்**

செயலாளர்,
திருமதி. சுகந்தி கிஷோர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

**பதிப்பாசிரியர் குழு**

திருமதி தெய்வேந்திரன் சீதாலட்சுமி
நூலகர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

திருமதி. சிவாகரன் கலைச்செல்வி
பிரதம முகாமைத்துவ உதவியாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

திரு. மார்கண்டு சுரேந்திரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

திரு .நடராஜா மனோகரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

திரு. சுப்பிரமணியம் வரதகுமார்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

திருமதி. சுதாயினி ஜெயகரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்குதமிழ் பிரதேச சபை.

செல்வி. நிஷாந்தி உதயகுமாரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டைப்படம் மற்றும் பக்கவடிவமைப்பு**

திருமதி. சுதாயினி ஜெயகரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

**கணணிவடிவமைப்பு**

செல்வி. நிஷாந்தி உதயகுமாரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

திருமதி. சுதாயினி ஜெயகரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சணை விளக்கம்

**சூரியன்**

அபிவிருத்தி செயற்பாடுகளின்போது அனைத்து பிரதேசங்களையும் உள்வாங்கல்

**வயல் நிலங்கள்**

இயற்கையோடு இணைந்த நடைமுறைகள்

**நீலவானம்**

பரந்துவிரிந்த அபிவிருத்திசார் சிந்தனை

**மாடுகளை பயன்படுத்தி உழுதல்**

பாரம்பரிய முறைகளையும் தேவைக்கேற்ப பயன்படுத்தல்

**நெற்கதிர்**

விவசாயம் பிரதான தொழில்

**செந்தாமரை**

வருமானத்தின் நிலைத்திருப்புத் தன்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கீதம்

வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே
வவுனியா தெற்குத்தமிழ்
பிரதேசசபை என்றும்
வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்கவே

மக்களாட்சித்தத்துவத்தில்
மலர்ந்த பிரதேசசபை
மக்களுக்காய்பணியாற்றி
மாண் புறவேவாழ்கவே

(வாழ்க.......)

சட்டஆக்கம் வரிவிதிப்பு
சாலை கல்வி சுகாதாரம்
கட்டடங்கள் கலை சமயம்
கால்வாய்கள் நீர்வழங்கல்

சந்தை பூங்கா மயானமோடு
சிறுவர் பாடசாலைகளும்
விந்தைமிகு நூலகமும்
வீதிவிளக்கு வாழ வழி

பிறப்புமுதல் இறப்புவரை
பிரதேசநலன் கருதிச்
சிறப்புமிகு சேவைசெய்து
சிறந்து என்றும் வாழ்கவே


(வாழ்க.....)

ஆக்கியோன் - கவிமாமணி அகளங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின்
# கௌரவ தவிசாளர்



## திரு.துரைச்சாமி நடராஜசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் செயலாளர்.



திருமதி.சுகந்தி கிஷோர்

Digitized by Noolaham Foundation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரநோக்கு – Vision

“தனித்துவம் மிக்க பிரதேசசபையாக
திகழ்தல்”

# பணிக்கூற்று–Mission

“ பொறுப்பினை செவ்வனே
நிறைவேற்றுவதற்கும்
பிரதேச மக்களுக்கு எம்மிடமுள்ள
வளங்களையும் ஆளணியினையும் பயன்படுத்தி
மிக உச்ச சேவையினை வழங்குவதற்கு
அர்ப்பணிப்புடன் செயலாற்றல்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
VAVUNIYA SOUTH TAMIL PRADESHIYA SABHA

# கௌரவ சபை உறுப்பினர்கள்



- **இரண்டாம் வரிசை** - இடமிருந்து வலமாக – கௌரவ. திரு. கார்த்திகேசு நந்தகுமார், கௌரவ. திரு. மாரிமுத்து அதிஸ்டசெல்வம், கௌரவ. திரு. பூபாலசிங்கம் சந்திரபத்மன், கௌரவ. திரு. தர்மலிங்கம் யோகராசா, கௌரவ. திரு. பொன்னம்பலம். மங்களநாதன். கௌரவ. திரு. கட்டைமரிக்கார் அப்துல் றகீம்.

- **முதலாம் வரிசை** - இடமிருந்து வலமாக – கௌரவ.திரு. விநாயகமூர்த்தி சசிதரன், கௌரவ.திரு. செல்வராசா றீகன், கௌரவ.திரு. கருணேஸ்வரன் பார்த்தீபன், கௌரவ.திரு. விஜயரத்தினம் உத்தரியநாதன், கௌரவ.திரு. தம்பாப்பிள்ளை சிவராஜா, வைத்தியர் கௌரவ.திரு. பத்மநாதன் சத்தியநாதன், கௌரவ.திரு. இராமநாதன் விஸ்வநாதன், கௌரவ.திரு. ஆறுமுகம் அருளானந்தம், கௌரவ.திரு.மணியம் நாகேந்திரராசா, கௌரவ.திரு. சிவப்பிரகாசம் சுப்பிரமணியம், கௌரவ.திரு. சுப்பிரமணியம் கணேசன், கௌரவ.திரு. நாகேந்திரன் கிஷ்ஷாந்தன், கௌரவ.திரு. கதிர்வேலு கணேசலிங்கம், கௌரவ.திரு. வேலாயுதபிள்ளை குகதாசன், கௌரவ.திரு.சிவகுரு விஜயகுமார்.

- **இருப்பவர்கள்** - இடமிருந்து வலமாக – கௌரவ.திருமதி. றிச்சட் அன்ரனி அமலியா, கௌரவ.திருமதி. யோகநாதன் சுதர்ஜினி, கௌரவ.திருமதி. கேதீஸ்வரன் ஞானமலர், கௌரவ.திரு. வெள்ளைச்சாமி மகேந்திரன், கௌரவ.திரு. துரைச்சாமி நடராஜசிங்கம், திருமதி. சுகந்தி கிஷோர்(செயலாளர்), திருமதி. சுதாயினி ஜெயகரன், கௌரவ.திருமதி. அஞ்சலா கோகிலகுமார். கௌரவ.செல்வி. சுப்பிரமணியம் ரூபலா, கௌரவ.திருமதி. துசாரி முத்துமாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலுவலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்குழுவின் செய்தி....

வாசிப்பு என்பது கற்கின்ற ஒரு வழிமுறையாகும். வாசிப்பதன் மூலம் ஒருவன் கற்றுக்கொள்கின்றான். அறிவைக் பெற்றுக்கொள்கின்றான். தான் வாழும் சூழலில் ஒருவன் தானாகவே கற்று முன்னேறிச் செல்வதற்கான இயலுமையை வாசிப்பானது ஒருவனுக்கு பெற்றுக்கொடுக்கின்றது. வாசிப்பானது ஒரு பிள்ளையின் சிறு பராயத்திலிருந்து உருவாக வேண்டும். இன்றைய நவீன உலகில் வாசிப்புத் திறன் மக்கள் மத்தியில் அருகி வருகின்றது. இதனால் பொது அறிவுத் திறனும் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றது.

வாசிக்கும் பழக்கத்தை மக்கள் மத்தியில் உருவாக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் உள்ளூராட்சிமன்றங்களினால் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்புட்டுவருகின்றது. 2019ம் ஆண்டிற்கான தேசிய வாசிப்பு மாத தொனிப்பொருள் "வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" என்பதாகும். இக்காலப்பகுயில் வாசிப்பு பழக்கத்தை சிறுவர்கள் உட்பட அனைவர் மத்தியிலும் ஊக்குவிப்பதற்கு பல விசேட செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறுவதற்கு வழிகாட்டி, ஒத்துழைப்பு வழங்கியதோடு **'தமிழோசை'** எனும் -சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்திகளையும் வழங்கிய சபையின் கௌரவ தலைவர் திரு. துரைச்சாமி நடராஜசிங்கம் அவர்களுக்கும் சபையின் செயலாளர் திருமதி.சுகந்தி கிஷோர் அவர்களுக்கும் நன்றிகளைச் சமர்ப்பித்துக்கொள்கின்றோம். அத்துடன் மேற்படி விழாவிற்கு அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் கௌரவ தலைவர், செயலாளர், கௌரவ சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், எமது சமூகத்தில் வாழும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை இந்நாளில் தெரிவித்து மகிழ்வடைகின்றோம்.

இறுதியாக **"தமிழோசை"** மலர் சிறப்பாக மலர்வதற்கு தமது அறிவையும் அனுபவத்தையும் ஒன்றுசேர்த்து ஆக்கங்களாக வடிவமைத்து தந்துதவிய அனைவருக்கும், இவ்விதழை சிறப்புற வடிவமைத்த வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் நிர்வாகத்திற்கும், மலர் வடிவமைப்பின் அச்சுப்பதிப்பு வேலைகளுக்கு உதவிய அனைவருக்கும் மலர்குழு சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்புமாதம் -2019ற்கான கௌரவ சபையின் தவிசாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தலைவர் ஆகிய நான் எமது சேவைக்காலத்தின் கொண்டாடப்படுகின்ற தேசியவாசிப்பு மாதத்தினை முன்னிட்டு 2019ஆம் ஆண்டில் முதன் முறையாக வெளிவருகின்ற **'தமிழோசை'** எனும் சிறப்புமலரிற்கு வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் தேசியவாசிப்பு மாத நிகழ்வுகள் வழமை போல இந்த வருடமும் மிகச்சிறப்பாக நடாத்தப்பட எம்மால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்நிகழ்வின் மூலம் சமூகமட்டத்தில் வாசிப்பையும் தகவல் தேடல்களையும் ஊக்குவிக்கும் நோக்குடன் எமது பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட அனைத்து கிராமங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் தோறும் வாசிப்பின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் சுவரொட்டிகள், பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டு துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. அத்துடன் வாசிப்புமாத செயற்றிட்டங்களை முன்னெடுத்து செல்லும் நோக்கில் எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சமூகமட்ட அமைப்பு தலைவர்களை அழைத்து வாசிப்பின் முக்கியத்துவமும் அதன் பயன்பாடுகளும் பற்றிய கருத்துக்களும் வழங்கப்பட்டு அவர்களின் ஒத்துழைப்புடன் சமூகமட்டத்தில் பலநிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்பள்ளி சிறார்கள் முதல் உயர்தர மாணவர்கள் வரைவாசிப்பு, மனனம், பொதுஅறிவு, கட்டுரை, பேச்சு போன்ற போட்டிகளும் அத்துடன் புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டும் முகமாக பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டும் முகமாக பரிசில்களும் வெற்றிக்கிண்ணங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இனிவரும் காலங்களிலும் இவ்வாறான செயற்பாடுகளை தொடர்ந்து செயற்படுத்த உள்ளோம்.

மேலும் இந்த நிகழ்வினை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு எனக்கு உறுதுணையாக நின்ற சபையின் உறுப்பினர்களுக்கும், நூலகசமூகத்தினருக்கும், சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவருக்கும், பல்வேறுவகையில் நிதிமற்றும் சரீரஉதவிகள் வழங்கிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எமது சபை சார்பான மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்கள் சேவையிலுள்ள,

**திரு. துரைச்சாமி நடராஜசிங்கம்**
**தலைவர்**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் 2019ற்கான செயலாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையினால் தேசிய வாசிப்பு மாதநிகழ்வுகளானது 2004ம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. அந்த வகையில் 2019ம் ஆண்டாகிய இவ்வருடமும் தேசிய வாசிப்புமாத நிகழ்வுகள் வெகுவிமர்சையாகக்கொண்டாடப்படுவதையிட்டும், அதன் விசேட அம்சமாக **'தமிழோசை'**என்ற சிறப்பு மலர் வெளியிடுவதையுமிட்டுபெருமகிழ்சியடைகின்றேன்.

இவ்வருடத்தின் வாசிப்பு மாதத்தின் முழு செயற்திட்டங்களையும் நடாத்துவதற்கான செயற்குழு வொன்று நியமிக்கப்பட்டதோடு, எமது சபையின் கௌரவ தலைவர் திரு.துரைச்சாமிநடராஜசிங்கம் அவர்களின் தலைமையில் அனைத்து கௌரவ சபை உறுப்பினர்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வானது வெகுவிமர்சையாக கொண்டாடப்படுகின்றது.

அந்த வகையில் எமது பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட கிராமங்கள் தோறும் வாசிப்பை ஊக்குவிக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டு **'வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்'** எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதனோடு முன்பள்ளி தொடக்கம் பாடசாலை மாணவர்கள் வரை கவிதை கட்டுரை, பாட்டு, திருக்குறள் மற்றும் கொன்றை வேந்தன் மனனம், நிறந்தீட்டுதல், பொதுஅறிவு, வாசிப்பு எனப்பலபோட்டிகள் நடாத்தப்பட்டு அவற்றில் வெற்றிபெற்றவர்களுக்குவெற்றிக்கிண்ணங்களும் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் 2019ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது பிரதேசத்தைச்சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களை பாராட்டும் முகமாக பரிசில்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கவும், எமது பிரதேசத்திற்குட்பட்ட முன்பள்ளிகளிலிருந்தும் முன்பள்ளிக்கு ஓர் மாணவர் எனதெரிவு செய்யப்பட்டு அவர்களிற்கு பாடசாலைக்கு செல்வதற்கான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கிவைக்கவும் எமது பிரதேசசபைக்குட்ட செவிப்புலனற்றோர் நிறுவனசிறார்களுக்கு 50,000.00 ரூபா பெறுமதியான பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி தேசியவாசிப்பு மாதத்தினையொட்டி இவ்வருடம் முதன முறையாக**'தமிழோசை'**எனும் சிறப்பு மலரானது அறிஞர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள், வாசகர்கள் எனப்பல துறைசார்ந்தவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவருகின்றது. இக்கன்னி முயற்சியைப்பாராட்டுவதோடு இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற ஆவணங்கள் இனிவரும் காலங்களிலும் வெளிவரவும் நல்வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்வதோடு இது போன்ற பணிகள் மென்மேலும் தொடரவும் வாழ்த்துக்கள்.

இவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாசிப்புமாதத்தின் செயற்திட்டங்களுக்கும் இறுதிவிழாவிற்கும் முழு ஒத்துழைப்பையும் வழங்கிய கௌரவ தலைவர், கௌரவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் ஆகியோருக்கும் இந்நிகழ்விற்கு வருகை தந்த பிரமுகர்கள் மற்றும் எம் சமூகத்தைச்சேர்ந்த அனைவருக்கும் எமது பிரதேசசபையின் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி. சுகந்திகிஷோர்
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின்

## பொதுவான புள்ளி விபரங்கள்

- மாகாணம் : வடக்கு
- மாவட்டம் : வவுனியா
- பிரதேசசெயலாளர் பிரிவு : வவுனியா
- தேர்தல் தொகுதி : வன்னி
- பிரதேசவிஸ்தீரணம் : 588.20 சதுரகி.மீ
- வீதிகளின் எண்ணிக்கை : 700
    - தார் வீதி : 56
    - கொங்கிறீட் : 29
    - கிரவல் வீதி : 251
    - மண் வீதி : 364



- வீதிகளின் நீளம் (கி.மீ) : 710.00
    - தார் வீதி : 57.71
    - கொங்கிறீட் : 6.41
    - கிரவல் வீதி : 417.46
    - மண் வீதி : 228.42
- உப அலுவலகங்கள் : 03
    - பேயாடிகூழாங்குளம்
    - பம்பைமடு
    - ஓமந்தை
- மொத்தசனத்தொகை : 104610
- ஆயள்வேதவைத்தியசாலை : 04
    - புதுக்குளம்
    - மணிபுரம்
    - ஓமந்தை
    - கோமரசன்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாய்சேய் நிலையம் : 07
    - ஓமந்தை
    - நொச்சிமோட்டை
    - கள்ளிக்குளம்
    - ஆசிகுளம்
    - பூவரசன்குளம்
    - நெளுக்குளம்
    - இளமருதன்குளம்

- சனசமூக நிலையங்கள் : 101
- நூலகங்கள் : 02 (கூமாங்குளம்,ஓமந்தை)
- குழாய்கிணறுகள் : 434
- பொதுக்கிணறுகள் : 143
- சந்தைகள் (மீன்) : 01
- இறைச்சிக்கடைகள் : 03
- மீன் கடைகள் : 02
- பொதுமலசலகூடம் : 03
- மயானங்கள் : 55
- வியாபார நிறுவனங்கள் : 1421
- சுற்றுலா மையங்கள் : 05
- உணவகம் : வன்னி அறுசுவையகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம் தொடர்பான பார்வை


## பிரதேச சபைக்கு உரித்தான நூலகங்கள்



ஓமந்தை நூலகம்



கூமாங்குளம் நூலகம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | நூலக ஆலோசனை மற்றும் நூலக வாசகர் வட்ட உறுப்பினர்கள் | 01 |
| 2. | 'ஊரக ஆட்சியின் மகிமையை ஊரறியச் செய்த சபை' எனது பார்வையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசபை | 02-08 |
| 3. | வாசிப்பின் மகத்துவம் | 09-15 |
| 4. | தமிழ் மன்னர்கள் வாழ்ந்த இடமான பாலமோட்டை பறையானாளங்குளம் காட்டுப்பகுதி | 16-18 |
| 5. | வாசிப்பு எனும் தேடல். | 19-20 |
| 6. | மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளிப் பருவத்தின் முக்கியத்துவம். | 21-22 |
| 7. | வாசிப்பை நேசி..! | 23 |
| 8. | புத்தகங்கள் அறிவுப் பெட்டகங்கள் | 24-25 |
| 9. | சிறு வயது முதல் வாசிப்புப்பழக்கம். | 26-27 |
| 10. | சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம் | 28-30 |
| 11. | ஆளுமை விருத்தியில் வாசிப்பின் பங்களிப்பு | 31-33 |
| 12. | சுயமுன்னேற்ற சிந்தனைகள் | 34-43 |
| 13. | பெரியோரைப் பேணுவோம் | 44-46 |
| 14. | பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் சில சேவைகளும் அவற்றிற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும் | 47-58 |
| 15. | உள்ளூராட்சி மன்றங்களில் வருமான சேகரிப்பில் எதிர்நோக்கும் சவால்கள். | 59-63 |
| 16. | போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் பெயர் விபரங்கள் | 64-65 |
| 17. | புலமை பரிசில் பரீட்சையில் பாடசாலைமட்டத்தில் அதிகூடிய புள்ளிபெற்ற மாணவர் பெயர் விபரம் | 66-67 |
| 18. | தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி மாணவர்களின் பெயர் விபரம் | 68-69 |
| 19. | தேசிய வாசிப்பு மாதம் 2019 இல் நிறந்தீட்டல் போட்டியில் முதலிடம் பெற்ற சித்திரம் | 70 |
| 20. | வவுனியா தெற்கு தமிழ்பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டுவரும் இடங்கள் சில. | 71-72 |
| 21. | தேசிய வாசிப்புமாதம் 2019ம் ஆண்டுக்கான நிகழ்வுகளின் பதிவுகள் சில.. | 73 |
| 22. | சிறந்த உளளூர் எழுத்தாளர் | 74 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக ஆலோசனைக்குழு உறுப்பினர்கள்

1. தலைவர் -கௌரவ. திரு. து.நடராஜசிங்கம்
2. உபதலைவர்- திருமதி.சுகந்தி கிஷோர்
3. செயலாளர் - திருமதி.T.சீதாலட்சுமி
4. உறுப்பினர் - திரு. இரா.கிருஸ்ணமூர்த்தி
5. உறுப்பினர் - திரு.V.S.கபிலன்
6. உறுப்பினர் - திரு.தோ.முருகேசு
7. உறுப்பினர் - திரு.மா.மாடசாமி
8. உறுப்பினர் - திரு.மு.நாகையா
9. உறுப்பினர் - செல்வன்.சி.பிரவின்ராஜ்
10. உறுப்பினர் - செல்வன்.ம.தர்ஷரூபன்
11. உறுப்பினர் - செல்வி. U.நிஷாந்தி
12. உறுப்பினர் - செல்வி. K.கோகிலவாணி

## நூலக வாசகர் வட்ட உறுப்பினர்கள்

1. தலைவர் -கௌரவ. திரு. து.நடராஜசிங்கம்
2. உபதலைவர்- திருமதி.சுகந்தி கிஷோர்
3. செயலாளர் - திருமதி.T.சீதாலட்சுமி
4. உறுப்பினர் - திரு. இரா.கிருஸ்ணமூர்த்தி
5. உறுப்பினர் - திரு.V.S.கபிலன்
6. உறுப்பினர் - திரு.தோ.முருகேசு
7. உறுப்பினர் - திரு.மா.மாடசாமி
8. உறுப்பினர் - திரு.மு.நாகையா
9. உறுப்பினர் - செல்வன்.சி.பிரவின்ராஜ்
10. உறுப்பினர் - செல்வன்.ம.தர்ஷரூபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஊரக ஆட்சியின் மகிமையை ஊரறியச் செய்த சபை' எனது பார்வையில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசபை

திருமதி. சுகந்தி கிஷோர்
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையில் வருடாவருடம் சிறப்பாக கொண்டாடப்பட்டுவரும் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளின் ஓர் அங்கமாக 2019ம் ஆண்டு **"தமிழ்மோசை"** எனும் பெயரில் வெளியிடப்படும் இச்சிறப்பு மலரின் ஊடாக எனது கருத்துக்களை பகிர்ந்துகொள்ள சந்தர்ப்பம் கிடைத்தமையினை முன்னிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையானது சுமார் 104,610 எண்ணிக்கையான மக்கள் தொகையை கொண்டமைந்துள்ளது இச் சபையின் செயலாளராக 2012.08.26 திகதி முதல் பதவி வகித்து வரும் காரணத்தினால் நீண்ட காலப்பகுதியில் எமது சபை பதித்து வந்த வரலாற்று தடங்கள் பற்றி எனது அனுபவங்களை பகிர்வது இங்கு பொருத்தமானதாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

உள்ளூராட்சி மன்றங்கள் என்பது ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் உள்ளடக்கி கிராமிய மக்களின் தேவைகளையும் அவ்வப் பிரதேசங்களின் வளர்ச்சினையும் நிறைவுசெய்யும் வண்ணம் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட அதிகாரப்பரவலாக்கல் அமைப்புக்கள் ஆகும்.

வரிகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் சுயமாக தனது வருமானத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் அந்நிதியை திட்டமிட்ட அடிப்படையில் மக்களின் தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் சட்டரீதியான செயற்பாட்டைக்கொண்டது உள்ளூராட்சி மன்றங்கள் ஆகும்.

வவுனியா மாவட்டத்தைப் பெறுத்தமட்டில் வவுனியா நகரசபை ஒன்றும், செட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா வடக்கு பிரதேசசபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை என்றும் நான்கு பிரதேச சபைகளை உள்ளடக்கியுள்ளது வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில், வவுனியா நகரசபையும், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையும் உள்ளடக்கியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை என உருவாக்கப்பட முதல் கிழக்கு மூலை வடக்கு கிராமசபை, கிழக்கு மூலை தெற்கு தமிழ் கிராமசபை மற்றும் நடுச்செட்டிகுளம் கிராமசபை என மூன்று கிராமசபைகளை உள்ளடக்கியதாக இதன் நிர்வாகப்பரப்பு காணப்பட்டது.

உள்ளூராட்சி சபைகளை சிறந்த நிர்வாகம் மூலம் சிறப்புற செயற்பட வைக்கும் நோக்கத்தைக் கொண்டு 1987ம் ஆண்டில் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் அமுலாக்கப்பட்டு 1988ம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து பிரதேசசபைகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தவகையில் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின் நகரசபை தவிர்ந்த மற்றைய பிரதேசங்கள் பிரதேச சபையாக பிரகடனப்படுத்தப்பட்டு எல்லைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டு 453/16 இலக்க 12.05.1987ம் திகதிய வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

1988ம் ஆண்டு யூலை மாதம் முதல் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் தெரியப்படக்கூடிய சூழ்நிலை அற்ற காரணத்தால் விசேட ஆணையாளர் மூலம் நிர்வகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தலைமை அலுவலகம் பேயாடிகூழாங்குளத்தில் இயங்கியது. உப அலுவலகங்களில் வரி சேகரிப்பு போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்ற போதிலும் முழு நிர்வாக கணக்கீடுகள் அபிவிருத்தித்திட்டச் செயற்பாடுகள் அனைத்தும் தலைமை அலுவலகத்திலேயே மேற்கொள்ளப்பட்டது.

1990களில் வவுனியாவில் இடம்பெற்ற வன்செயல் யுத்த அனர்த்தம் காரணமாக தலைமை அலுவலகம் மற்றும் மூன்று உப அலுவலகங்கள் முற்றாக ஆவணங்களுடாக அழிக்கப்பட்டன. இதை தொடர்ந்து தலைமை அலுவலகம் ஓமந்தை கமநல சேவை திணைக்களத்திலும் கச்சேரி கட்டடத்திலும் தற்காலிகமாக இயங்கிவந்தது. 1994ம் ஆண்டளவில் பம்பைமடுவில் பிரதேச சபை அலுவலகம் நிரந்தரமாக ஆரம்பிக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் முன்னோக்கி நகர்ந்தன.

பற்பல வசதிகளை ஏற்படுத்தி வருமான மட்டங்களை அதிகரித்துக் கொண்டிருக்கும் போது பம்பைமடு பகுதியில் அமைந்துள்ள அலுவலக கட்டடம் இராணுவ பயன்பாட்டிற்கு தேவை என கோரியமைக்கு அமைவாக அங்கிருந்து 2000ம் ஆண்டு இடமாற்றப்பட்டு நெளுக்குளத்தில் தனியார் வீடு ஒன்றில் மாதாந்த வாடகைக்கு இயங்கி வந்தது. இக்காலப்பகுதியில் தான் மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்காலிகக் கட்டிடத்தில் இயங்கிவந்த பிரதேசசபைக்கு நிரந்தர கட்டிடமொன்று அவசியம் என்ற தேவை உணரப்பட்ட நிலையில் 2012ம் ஆண்டு நேரியக்குளம் வீதி நெளுக்குளம் எனும் இடத்தில் தனக்கென ஒரு தனியாக நிரந்தர அலுவலகத்தை நிறுவி பணிகளை மீள ஆரம்பித்து படிப்படியாக குறிக்கோளை நோக்கி முன்னேறி வருவதைக் காணலாம்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் செயற்பாடுகள் பற்றி நோக்கின், **'கருவறையில் இருந்து கல்லறை வரை'** என தொன்றுதொட்டு வரைவிலக்கணப்படுத்தப்பட்டு வருவதன் மூலம் மக்களுக்கு வழங்கவேண்டிய சேவை, பிரதேசசபையினால் ஆற்றப்படுகின்ற செயற்பாடுகள் என்பன வரையறையற்றது என்பது வெளிப்படையாகின்றது.

மக்களிடமிருந்து பெறப்பட்ட வரி மூலமான நிதியை மக்களுக்கு எப்படி செலவழிப்பது என்பதை திட்டமிட்டு வெளிக்காட்டும் ஒரு செயற்பாட்டை உள்ளூராட்சி மன்றங்கள் பாராளுமன்றங்களைப் போல வரவுசெலவுத்திட்டங்களினூடாக முன்னெடுக்கின்றன. அந்தவகையில் வருட இறுதியில் அடுத்த வருடத்திற்கான வரவுசெலவுத் திட்டத்தை எமது பிரதேச சபையும் தயாரித்து சபையின் அனுமதி பெற்று அதனைத் தொடர்ந்து புதிய வருடம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவ் வரவுசெலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

உள்ளூராட்சி மன்றத்தின் செயற்பாடுகளுக்கு பிரதானமாக ஆதனவரி, வாடகை, வியாபார வரி, வியாபார அனுமதிப்பத்திர கட்டணம், சேவைக்கட்டணம், விற்பனைக் குத்தகை, குற்றப்பணம், தண்டப்பணம், முத்திரைத்தீர்வை மற்றும் நன்கொடைகள் என்பவற்றின் மூலம் நிதி கிடைக்கின்றது.

ஆதனவரி மதிப்பீட்டைப் பொறுத்தரை, ஒரு உள்ளூராட்சி மன்றத்திற்குரிய பிரதான வருமானமாகத்திகழ்வது சட்டபூர்வமாக மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடப்படுவது ஆதன வரியாகும். இங்கு காணி கட்டிடங்களின் வருடாந்த பெறுமதியின் ஏதேனும் ஒரு சதவீதமானது உள்ளூராட்சி விடய அமைச்சின் அனுமதியுடன் வரியாக அறவிடப்படும். அந்தவகையில் எமது சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசத்திலுள்ள தோணிக்கல், நெளுக்குளம், உக்குளாங்குளம், கூமாங்குளம், கணேசபுரம் மற்றும் சமயபுரம் ஆகிய ஆறு கிராமங்களில் ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவீடு செய்யப்படுகின்றது. ஒரு வருடத்திற்கான ஆதன வரி அறவிடுவதற்கான வரித்தொகை முதலான விபரங்கள் அடங்கிய K.படிவமானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வருடத்தின் இறுதிப்பகுதியில் தயாரிக்கப்பட்டு ஆதன உரிமையாளர்களுக்கு வழங்கப்படும். குறிப்பிட்ட வருடம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஆதனவரியை செலுத்துவதற்கான வாய்ப்பு மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அதிலும் தை மாதத்தில் ஆதன வரியைச் செலுத்துபவர்களுக்கு கட்டணத்தொகையில் 10% கழிவும் மாசி மாதத்தில் வரி செலுத்துவோருக்கு கட்டணத்தொகையில் 5% கழிவும் வழங்கப்படுகின்றது. அதேசமயம் வருடாந்த வரியை குறித்த காலப்படுதிக்குள் செலுத்தாதவர்கள் மீது தண்டம் விதிக்கவும் சட்ட நடவடிக்கை எடுக்கவும் வரி செலுத்த முடியாதவர்களுக்கு வரி விலக்கழிப்பு செய்யவும் சட்டவரையறைக்கு உட்பட்டு ஏற்பாடுகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் 2004ம் ஆண்டிலிருந்து ஆதனங்கள் வரி மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மற்றுமொரு பணியான நூலக சேவையை எடுத்துக்கொண்டால், பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் ஏராளமான பாடசாலைகள் உள்ளமையால் மாணவர்களின் மற்றும் வாசகர்களின் தேவை கருதி ஆரம்பகாலத்திலிருந்து நூலக சேவை பிரதேச சபையால் வழங்கப்பட்டுவந்த போதிலும் 1990ல்தான் கூமாங்குளத்தில் அப்பகுதியைச் சேர்ந்த திரு.நா.செல்லையா என்பவரால் வழங்கப்பட்ட காணியில் UNHCR அனுசரணையுடன் சேவா லங்கா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட நூலகமானது 21.05.1996ல் திறந்து வைக்கப்பட்டது. இது வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான பொது நூலகமாக உள்ளது. அதைவிட ஓமந்தையிலும் நூலகமொன்று காணப்படுகின்றது. இவ் நூலகங்களில் பல்துறை சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் என்பன மக்களின் அறிவுப்பசியை போக்கும் வகையில் காணப்படுகின்றன.

சுகாதார சேவை பற்றி நோக்கின், எமது பிரதேச சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கிழக்கு மூலை வடக்கு உப அலுவலகத்தில் ஆயர்வேத வைத்தியசாலை இயங்கி வந்தது. எனினும் நாட்டின் போர்க்கால சூழல் காரணமாக கட்டிடங்கள் முற்றாக அழிக்கபட்டு 2000ம் ஆண்டில் புதுக்குளத்திலும் எல்லப்பர்மருதங்குளத்திலும் இயங்கி வந்தது. இன்று ஆயர்வேத மருத்துவ சேவை புதுக்குளம், மணிப்புரம், ஓமந்தை கோமரசங்குளம் போன்ற இடங்களில் இயங்கி வருகின்றன.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையானது ஒரு பரந்துபட்ட பெரிய நிலப்பரப்பினைத் தன்னகத்தே கொண்ட ஒரு உள்ளூராட்சி நிறுவனமாகும். இங்கு வாழும் மக்களின் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் பொது வசதிகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியில் பிரதேசசபையின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கூடுதலாக அபிவிருத்தி வேலைகளை செய்துமுடிக்கவேண்டிய அவசியம் உள்ளதால் தற்போது இத்தேவைகள் பல்வேறுப்பட்ட அரசநிதி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதிமூலங்களினூடாக நிதி பெறப்பட்டு அபிவிருத்தி வேலைகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வேலைகளை இனங்காண்பதற்கு பிரதேச கிராம மட்ட அமைப்புகளாக கிராம அபிவிருத்தி சங்கங்கள் சனசமூகநிலையங்கள் என்பவற்றின் ஒத்துழைப்பும் பெறப்படுகின்றது.

ஒவ்வொரு வருடமும் அபிவிருத்தித் திட்டங்களை தேர்ந்தெடுக்கும் போது இவ்வமைப்புகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு அவர்களிடமிருந்து முன்னுரிமை அடிப்படையில் வேலைத்திட்டங்கள் பெறப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டு நான்காண்டு திட்டம் வரவு செலவு திட்டம் முதலானவை தயாரிக்கப்பட்டு வேலைகளுக்கான நிதி கிடைக்கும் போது இத்திட்டங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்காலத்தில் பிரதேசமட்ட தேவைகள் இச் சபையின் 13 வட்டாரங்களையும் பிரதிபலிக்கும் கௌரவ உறுப்பினர்களினதும் பங்களிப்பும் மிகப் பிரதானமாக உள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எமது சபையின் சேவைகளுள் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குவதும் பிரதானமான ஒன்றாகும். சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொழில் முயற்சிகளை கட்டுப்படுத்தி சூழல் பாதுகாப்பை பேணுவதற்கு இவ் உரிமம் ஒரு சட்டரீதியான அதிகாரமாக உள்ளது. இதனூடாக சூழல் பாதுகாப்பிற்கும் எமது சபையினால் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்து வகையில் எமது சபையினால் சுமார் 710Km நீளமான தார் கிரவல் மண் கொங்கிறீட் வீதிகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அதைவிட மக்களின் பொது வசதிகளை கருத்தில் கொண்டு எமது ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் பல பொதுநோக்கு மட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு தூய்மையாக குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இன்றுவரை 434 குழாய் கிணறுகள் எமது சபையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி அவசியமான இடங்கள் என கருதப்படும் இடங்களும் மேலும் பல குழாய்கிணறுகள் அமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட 143 திறந்த பொதுக்கிணறுகளும் எமது சபையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வரட்சியான காலத்தில் உழவு இயந்திரத்தில் பவுசர் மூலம் குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அதுபோல கட்டிட அனுமதி வழங்களும் எமது சபையின் பாரிய பொறுப்பு மிக்க சேவைகளில் ஒன்றாகும். காரணம் அனுமதி பெறபடாத கட்டிட நிர்மாணங்களினால் இயற்கையான வடிகால் அமைப்புகள் தடைப்பட்டு பல சுற்றாடல் பிரச்சனைகள் ஏற்படும் வாய்ப்பு காணப்படுகின்றன. இதனை கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி சேவையும் சுகாதார திணைக்களத்தின் ஒத்துழைப்போடு இன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதைவிட குப்பை அகற்றல், கழிவு அகற்றல், கட்டாக்காலி விலங்குகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தல், நீர் விநியோகம், வீதி புனரமைப்பு, வாகனம் வாடகைக்கு வழங்கல், வீதி விளக்குகள் பொருத்ததுதல், இறைச்சிக்கடை மற்றும் மீன்கடை குத்தகைக்கு வழங்கல், கடைக்கட்டிடம் வாடகைக்கு வழங்கல் என பல்வேறு செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வரும் எமது பிரதேசசபையானது, தனது தன்னிகரற்ற சேவைகளுக்காக பல விருதுகளையும் பெற்றுள்ளது. அந்தவகையில் விசேடமாக குறிப்பிடும் போது

1. Intersectoral Co-ordination with Department of Health for Dengue Control Activities – 2017
2. National Reading Month – October 2016 (National Library and Documentation Service Board)
3. Swarnapuravara Spl Merit Award All Iland Management Compition For LA – 2016 (Min. of. Provincial Gov. and Local Government)
4. Financial Management Evalution Programme – Financial Year – 2017 (Physical Analysis cell, Provincial Teasury Chief Secretariat, NP)
5. Best Dengue Free Premises Compitition 2017 (KITH & KINS)
6. Ceremoney of Financial Management Performance of NP – 2018
7. Financial Management Evalution Programme – Financial Year – 2017 (Chief Minister NP Council)
8. Evaluation Programme of the Committee on Public Accounts 2015 (Parliament of Srilanka)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான விருதுகளை குறிப்பிடலாம்.

இவ்வாறாக அன்றுமுதல் இன்றுவரை தனக்கென தனியானதொரு இடத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையானது பல்வேறு வகையான சவால்களையும் முறியடித்து முன்னோக்கி விரைந்து செல்கின்றது. அந்தவகையில் முன்பள்ளி சுகாதாரம், நீர்வழங்கல், பயன்பாட்டுச் சேவை, நூலகம், என தன் சேவைக்கதிர்களை ஆளுகைக்குட்பட்ட பகுதி முழுவதும் பாரபட்சமின்றி பரப்பி ஒளி வீசும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையானது மென்மேலும் மக்கள் சேவைகள் பலவற்றை ஆற்றி, மக்கள்

சேவைக்கு ஒரு முன்னுதாரணமான நிறுவனமாக திகழ்வதோடு பற்பல விருதுகளையும் பெற்று மென்மேலும் புகழ்பெற கடவுளின் நற்கருணையை வேண்டி நிற்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பின் மகத்துவம்

திரு. ச.சண்முகதாசன்
சிரேஷ்ட உதவி நூலகர்
வவுனியா வளாகம், யாழ்.பல்கலைக்கழகம்.

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களிலும் மனிதனுக்கு மட்டுமே உள்ளசிறப்பு ஆறு அறிவுடன் இயங்குவதுதான். இதில், ஆறாம் அறிவான பகுத்தறிவிற்கு மிகவும் முக்கியத்துவம் உள்ளது. காரணம்,அதுவே மனிதனை இவ்வளவு தூரம் பரிணாம வளர்ச்சியடைய வைத்திருக்கின்றது. ஒரு விடயத்தையோ அல்லது சூழ்நிலையையோ தன்னுடைய அறிவைப் பயன்படுத்தி பகுத்துப் பார்த்து அதற்கு ஏற்றாற்போல் செயற்படுவதே மனிதனுக்கு உண்டான சிறப்பு ஆகும். தான் கேட்ட, பார்த்த, வாசித்த, உணர்ந்த விடயங்களின் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்தியே மனிதன் தன்னுடைய செயல்களுக்கான யோசனையைப் பெறுகின்றான். இங்கே நாம் கேட்ட, பார்த்த, உணர்ந்த விடயங்களைக் காட்டிலும் நாம் வாசித்துத் தெரிந்து கொண்ட விடயங்களே அதிகம். காரணம் நாம் அதிக விடயங்களைக் கேட்டுக்கொண்டே இருக்கமுடியாது. அதற்கு நேரமும் போதாது, முழுமையான விடயத்தையும் ஒருவரால் சரியாகக் கூறமுடியாது. அதேபோல் உலகில் நடைபெறும் அனைத்தையும் நாம் பார்க்க முடியாது, அதற்குள் நம் வாழ்நாள் முடிந்துவிடும். மேலும் அனைத்து விடயங்களையும் நாம் உணரவும் முடியாது. ஆனால் வாசிப்பு அப்படி அல்ல அதன் மூலம் அனைத்து விடயங்களையும் முழுமையாக உடனே அறிந்து கொள்ள முடியும். நாம், நம் வாழ்நாள் முழுவதும் வாசித்து அறிவைப் பெருக்கிக் கொண்டே இருக்கலாம். ஏனென்றால், வாசிப்பு ஓர் அறிவை வழங்கும் அமுதசுரபி. அதன் மூலம் அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியும். அதற்கு பாடப்புத்தகங்களைத் தாண்டிய வாசிப்பு இருக்க வேண்டும். வாசிப்பு ஒரு மனிதனை அறிவார்ந்தவனாகக் கட்டமைக்கின்றது. வாசிப்பே ஒருவரின் சிந்தனைத் திறனை அதிகரிக்கச் செய்கின்றது.

ஒரு கல்லை உளி செதுக்கிச் செதுக்கி அழகிய சிற்பமாக மாற்றுவதைப் போல் புத்தகம், வாசிக்க வாசிக்க நம்மை அறிவுள்ள, பண்புள்ள மனிதனாக மாற்றுகின்றது. நமக்குத் தேவையான விடயஞானம் பெற நாம் புத்தகங்களை வாசிக்க வேண்டும். புத்தக வாசிப்பின் மூலம் கிடைத்த அறிவை நாம் வாழ்நாளில் தேவையானபோது பயன்படுத்திக்கொள்ள முடியும். உலகில் நாம் பார்த்த,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்ற தலைவர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் அனைவரும் புத்தகம் வாசிக்கும் பழக்கத்தைக் கொண்டவர்களே. அதன் மூலம் பெற்ற அறிவைக் கொண்டே சிந்தித்தும், செயற்பட்டும், நம்மிடையே பிரபலமானார்கள்.

வாசிப்பது என்பது பாடப்புத்தகங்களுடன் மட்டும் நின்றுவிடாமல் அதைத் தாண்டியதாக இருக்க வேண்டும். பொதுவாக பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் படிப்பவர்கள் தங்களுடைய பாடப்புத்தகங்களைப் படிப்பதையே வாசிப்பு என்று தவறாக எண்ணுகின்றனர். அதுவே போதும் என்ற எண்ணத்தோடு நின்று விடுகின்றனர். ஆனால் அதுவல்ல வாசிப்பு. பாடப்புத்தகங்களைத் தாண்டி இவ்வுலகில் பொதுவான அறிவை வழங்கக்கூடிய புத்தகங்கள் நிறைய இருக்கின்றன அவற்றையும் வாசிக்க வேண்டும். உலக அறிவைப் பெறுவதற்கு நாம் பல்வேறுபட்ட புத்தகங்களை வாசிக்க வேண்டும். அனைவரும் தங்கள் குழந்தைகளிடம் வாசிப்பின் அத்தியாவசியத்தை உணர்த்தி அப்பழக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். வீட்டிலேயே தங்கள் வசதிக்கு ஏற்ப சிறு நூலகம் அமைக்க வேண்டும். பொது நுழைவுத்தேர்வுகளும், போட்டித் தேர்வுகளும் இன்று பாடப்புத்தகங்களைத் தாண்டிய வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. எனவே, இன்று பாடப்புத்தகம் தாண்டிய பொதுஅறிவு மிகவும் முக்கியமான ஒன்று.

"கண்டதைக் கற்றவன் பண்டிதன் ஆவான்" என்ற பொன்மொழி வாசிப்பின் முக்கியத்துவத்தை எளிதாக விளக்குகிறது. உலகிற்கான வாழ்வியல் தத்துவங்களை வழங்கிய தத்துவஞானிகள் அனைவரும் ஆழ்ந்த வாசிப்பின் மூலமே அவற்றை உருவாக்கினார்கள். சாக்ரட்டீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில், கார்ல் மார்க்ஸ், டார்வின், புத்தர் போன்றோரை இந்த உலகம் போற்றக் காரணம் அவர்களின் அறிவுக்கூர்மையே. இவர்களின் தத்துவங்களே இன்று உலகை ஆண்டுகொண்டிருக்கின்றன. இவர்களின் தத்துவங்களை நாம் தெரிந்து கொள்ள நாம் இவர்களின் புத்தகங்களை வாசிக்க வேண்டும். காலையில் நூலகம் திறக்கும் போது முதல் ஆளாக உள்ளே சென்று நூலகநேரம் முடிந்தது கூட தெரியாமல் தன்னுடைய வாசிப்பில் மெய்மறந்த அம்பேத்கரால் தான் உலகிலேயே சிறந்த அரசியலமைப்புச்சாசனத்தை வழங்க முடிந்தது. நமது நாட்டை ஆட்சி செய்த பல அரசியல் தலைவர்களும் இலக்கியஞானம் பெற்றவர்களே. காரணம் அவர்களிடம் இருந்த வாசிப்புபழக்கமே. இந்த சமூகத்தில் நமக்கான வாழ்க்கை நெறிமுறைகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் உருவாக்கிக் கொள்ள வாசிப்புத்தான் உதவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாசிப்பில்லாமல் வாழ்க்கையில்லை. வாசிப்பின் வழியேதான் மனிதன் சிந்திக்கிறான். அந்த சிந்தனையின் மூலமே முன்னேறுகிறான். அறிவியலும், மதங்களும், கண்டுபிடிப்புக்களும் வாசிப்பின் விளைவாகவே நிகழ்ந்தன, நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. வாசிப்பில்லாமல் இவை எதுவுமே நிகழ்ந்திடாது. வாசிப்பு ஒருவன் என்னவாக இருக்கிறான், என்னவாக ஆகிறான், எந்த வகையில் தான் வாழும் உலகத்தை புரிந்து கொள்கிறான், தன் சகமனிதர்களுடன் எவ்வாறு உறவுகொள்கின்றான் என்பதை உணர்த்தக் கூடியது. வாசிப்பில்லாத ஒருவன் வெளிச்சம் இல்லாத இடத்தில் முடங்கிவிடும் தாவரம் போன்றவன். வளர்ச்சியை விரும்புகிறவனே வாசிப்பவனாகிறான்." என்கிறார் கவிஞர் சுகுமார்.

"வாழ்க்கை நம் ஒவ்வொருவரையும் குறிப்பிட்ட ஒரு சூழலில் குறிப்பிட்டகால, இன குடும்பத்திற்குள் வாழமட்டுமே அனுமதிக்கிறது. ஆனால் புத்தகங்கள் ஒருவனை எல்லா காலங்களிற்குமே சென்று வரவும் பல்வேறு மனிதர்களை, அனுபவங்களை அறிந்து கொள்ளவும் உதவுகின்றது. அந்த வகையில் புத்தகங்களே உண்மையான கால இயந்திரம் புத்தகங்களை வாசிப்பதன் வழியில் உலகை தெரிந்துகொள்வதற்கும் நம்மை பற்றியும் அறிந்து கொள்ளும் நம்மிடம் உருவாகும் மாற்றங்கள் சமூகத்திலும் எதிரொலிக்கும் என்பதே நிஜம்." என்கிறார் எழுத்தாளர் S.ராமகிருஸ்ணர்

வாசிப்பு மூன்று கூறுகளாக அமைகின்றது. அவை

1. **தான் கற்ற துறையை விரிவுபடுத்தலுக்காகவும்,அதில் ஆழ்ந்து செல்வதற்காகவும் வாசித்தல்.**

   தன் துறை சார்ந்து கற்றலை விரிவுபடுத்த வாசித்தல் என்பதற்கு ஆலோசனை பெருமளவு தேவை இல்லை. துறைசார்ந்தவரே அதனை நெறிபடுத்திக் கொள்ள முடியும். எனினும் இங்கு ஓர் அடிப்படை உண்மை உள்ளது. அதனை மட்டும் குறிப்பிடுவோம். தனது குறிப்பிட்ட துறையின் முன் மாற்று சிந்தனைகளையும் வித்தியாசமான கருத்துக்களையும், பார்வைகளையும் கற்றலே இந்த வாசிப்பின் அடிப்படையாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட துறையை நான் படித்தகோணத்திற்கான விமர்சனங்கள் யாவை அதன் மாற்றுப் பார்வை என்ன எனப் புரிந்துகொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. **அறிவின் புதிய பரப்புகளை அறிந்து கொள்ள வாசித்தல்.**

தன் துறைக்கு வெளியே உள்ள அறிவுப் பகுதிகளை வாசித்தல் என்பதாகும். இதுவே உண்மைகளை முழுமையாகப் புரிந்து கொள்ளவும், பிரச்சினைகளை பலகோணங்களில் பார்க்கவும் உதவி செய்யும்.

3. **பொதுவாசிப்பு.**

துறைசார் கலைச் சொற்பிரயோகங்கள், வகைப்படுத்தல்களை விட்டு நீங்கிய நூல்களை வாசித்தலாகும். இத்தகைய நூல்கள், பொருளாதாரம், அரசியல், மருத்துவம் போன்ற துறைகள் பற்றியும் அக்கலைகளில் உள்ள பொது உண்மைகளையும் அவைசார் பிரச்சனைகளைப்பற்றியும் பேசும். இவையே வாசிப்பின் அடிப்படையாகும். வாசிப்பை இங்கிருந்து ஆரம்பித்தல் இலகு. வெறும் ஆரம்ப அறிவு பெற்றவர் கூட தன் கற்றல்களை இந்த வாசிப்பிலிருந்து ஆரம்பிக்கலாம். தேடல் நிறைந்த ஒரு வாசகன் தன்னை ஒருஅறிவு ஜீவியாக வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற இலக்கையும் கொண்டிருக்க வேண்டும். கல்வி நிறுவனங்களில் தரப்படும் பாடத்திட்டங்களை மட்டும் படித்து அறிவு ஜீவியாகமாறல் மிகவும் அருமை. எனவேதான் பட்டங்கள் பலவற்றைப் பெற்றும் வெறும் தகவல்கள் சுமந்தவர்களாக இருக்க பலரை நாம் காண்கிறோம்.

அறிவு ஜீவி என்பவன் விடயங்களை தர்க்கரீதியாகப் பார்க்க தெரிந்தவன். அவன் ஒரு கண்டுபிடிப்பாளன். நிகழ்வுகள், இயக்கங்களுக்கிடையே காணப்படும் தொடர்புகளைக் கண்டுமுடிவுகளுக்கு வரக்கூடியவன். ஆக்கசக்தி உள்ளவன். பல புதிய உண்மைகளையும், சிந்தனைகளையும் முன்வைப்பவன். அறிவு ஜீவியை ஒரு கல்வி ஸ்தாபனம் உருவாக்குவதில்லை. சில அடிப்படைகளை மட்டுமே அதனால் கொடுக்க முடியும். பரந்த ஆய்வடிப்படையிலான வாசிப்பே ஒரு அறிவு ஜீவியை உருவாக்குகிறது.

வாசிப்பெனும் ஜீவ ஒளி குறைந்தது பாமரத்தன்மையை இல்லாமலாக்க வேண்டும். விடயங்களை மிகவும் மேலோட்டமாகப் பார்ப்பது, வெறும் வசன சொற்கவர்ச்சிகளுக்கு உட்படுவது போன்றவற்றையே பாமரத்தன்மை என்கிறோம். விடயங்களை ஆழ்ந்து பார்க்கத் தெரியாமல் ஆட்டுமந்தைக் கூட்டம் போல் சத்தமிடும் எல்லோருக்கும் பின்னால் செல்லும் நிலைதான் சர்வதிகாரத்தை உருவாக்கும். இது சர்வதேச ஆதிக்க. சுரண்டல் சக்திகளுக்கு சாதகமான நிலையைத் தோற்றுவிக்கும். இந்நிலையை அகற்றபயன்படுவது சுதந்திர வாசிப்பே. இதற்கு மக்கள் திட்டமிட்டு நெறிப்படுத்தப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நாம் பாமரமக்கள் என்று குறிப்பிடுவது பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களை மட்டுமல்ல. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களிலும் பாமரர்கள் உள்ளனர். தமது பாடத்திற்கு வெளியில் எதுவும் தெரியாது பட்டம் பெற்றதன் பின்னர் அறிவைத் தேடுவதை நிறுத்திக் கொண்டவர்கள் பலர் உள்ளனர். பாமரர்களையும் வாசிக்க பழக்க வேண்டும். பாமர தன்மையை நீக்கலே வாசிப்பின் முக்கிய இலக்காக கொள்ளப்பட வேண்டும்.

கல்வித்துறையில் குறிப்பாக ஆரம்பக் கல்விப் புலத்தில் வாசிப்பின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. மௌனமாக வாசித்தல், உரத்து வாசித்தல் என்னும் சொற்கள் கற்றல், கற்பித்தலில் மொழிப்பாடத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பன மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவற்றில் கேட்டல், பேச்சு என்பவற்றை பிள்ளையானது பாடசாலைக்கு வருவதற்கு முன்னே கற்றுக் கொள்கின்றது. வாசிப்பு, எழுத்து இரண்டையும் பிள்ளை பாடசாலையில் கற்றுக் கொள்கின்றது. தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக வாசித்தல், பொழுதுபோக்கிற்காக வாசித்தல் என்றபடி ஒருவரின் நாளாந்த வாழ்க்கையில் வாசிப்பின் பயன் முக்கியத்துவம் பெறுகிறது.

வாசிப்பானது கற்கின்ற ஒரு வழிமுறை. வாசிப்பின் மூலம் ஒருவன் (மாணவன்) கற்றுக் கொள்கின்றான். அறிவைப் பெற்றுக் கொள்கின்றான். அவனது விளக்கம் விருத்தியடைகிறது. இவ்விருத்தியானது பிள்ளையின் புத்திசார் விருத்தியில் முக்கிய பங்குவகிக்கிறது. நூல்கள் மூலம் காலம், நேரம் மற்றும் ஏனையோரில் தங்கியிருப்பதிலிருந்து மாணவன் விடுதலை பெறுகின்றான். பாடசாலையிலோ அல்லது வெளியிலோ அவன் விரும்பும் போது தானாகவே கற்று முன்னேறிச் செல்வதற்கான இயலுமையை வாசிப்பானது அவனுக்கு பெற்றுக் கொடுக்கின்றது.

வாசிப்பானது புதிய அறிவைப்பெற்று அனுபவத்தை விரிவாக்கிக் கொள்ள உதவுகிறது. மற்றைய சமயத்தவர்களின் கலாசார விழுமியங்களை அறிந்து இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைப் பெறுவதற்கும், இனஒற்றுமையுடன் வாழ்வதற்கும் வாசிப்பு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது.

மேலும் எழுத்துத் திறனைப் பெறுவதற்கு வாசிப்புத் திறன் அவசியம். பாடசாலையில் வாசிக்க முடியாத ஒரு பிள்ளை எழுத முடியாதவனாக இருப்பான். வாசிப்புத்திறனை ஆரம்பத்திலிருந்து விருத்தி செய்ய வேண்டும். ஆரம்பப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தில் வாசிப்பை விருத்திசெய்யத் தவறினால் பிள்ளை பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்படும்.

பாடங்களை கற்க முடியாமை, பரீட்சைக்கு விடையளிக்க முடியாமை, கல்வியில் பின்தங்குதல், மனவெழுச்சிப் பிரச்சினைககள் போன்றன ஏற்பட்டு பாடசாலைக் கல்வியில் பிள்ளைக்கு வெறுப்பு ஏற்படும் .இதனால் பாடசாலையிலிருந்து பிள்ளை இடைவிலகக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். எனவே வாசிப்பை கட்டாயப்படுத்த வேண்டிய தேவை பெற்றோருக்குண்டு.

எழுத்துகளை காணும் நிலையே வாசித்தலின் ஆரம்பமாகும். கண்ணால் காணுவதை மூளையானது அறிந்து பொருள் உணருகின்றது. இதன் போது அங்கே வாசித்தல் நிகழ்கின்றது. இங்கு இரண்டு உளவியற் செயல்கள் நடைபெறுகின்றன. மூளை கண்ணுக்குச் செலுத்துதல், கண் மூளைக்குச் செலுத்துதல் என்பன நடைபெறுகின்றன. அதாவது வரி வடிவத்திலுள்ள சொற்ளை ஒலி வடிவமாக மாற்றி உச்சரித்தல், உறுப்புகளும் சொற்களை நோக்குகின்ற கண்ணும் ஒத்துழைத்தல். இவ்வாறு ஒத்துழைக்கின்ற போது தான் அங்கே வாசித்தல் நடைபெறுகின்றது.

வாசிப்பு ஒரு பிள்ளையின் சிறுபராயத்திலிருந்து உருவாக வேண்டும். இன்றய நவீன உலகில் வாசிப்புத்திறன் அருகிவருகின்றது. இதனால் பொதுஅறிவுத்திறன் மாணவர்(மக்கள்) மத்தியில் மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகிறது. இது பிள்ளையின் வாசிப்புத்திறனில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் காட்டுகின்றது.

"ஸ்மாட் போன்" பாவனை, கணணித் தொடர்புகள், தொலைக்காட்சி நிழ்ச்சிகள், வானொலி போன்ற ஊடகங்களின் செயற்பாடுகளின் காரணமாக இன்று நூல்ளையும் பத்திரிகைகளையும் வாசிப்பதை அதிகமானோர் தவிர்த்து வருகின்றனர். இந்த இலத்திரனியல் சாதனங்கள் வாசிப்புக்கு போட்டியாக இருக்கின்றன. உலக விடயங்களைத் தெரிந்துகொள்வதற்கும், நண்பர்களுடன் இணைப்பிலே இருப்பதற்கும் சமூகவலைதளம் முக்கியம்தான். ஆனால், அதில் நாம் எவ்வளவு தூரம் பொன்னான நேரத்தை தேவையில்லாத விடயங்களில் கவனத்தைச் செலுத்துவதன் மூலம் விரயம் செய்கின்றோம் என்பதைப் புரிந்துகொண்டு அந்த அடிமை முறையிலிருந்து வெளியேற வேண்டும். மேலும் முகநூல்களில் செய்திகளை, தகவல்களை பதிவிடும் அதிகமானோர் இலக்கணப் பிழைகளுடனும், எழுத்துப் பிழைகளுடனும் எழுதுகின்றனர். இதற்குக் காரணம் வாசிப்பு பற்றிய போதிய தெளிவின்மையும் மொழியறிவு பற்றிய தகவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறையுமாகும். இதைத் தவிர்ப்பதற்கு வாசிக்க வேண்டும். வாசிக்க வாசிக்கஅறிவு கூர்மையடைகிறது.

வாசிக்கும் சமூகத்தை சிறுவர்களிடம் உருவாக்குவதற்கு பாடசாலையில் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு கவிதை, பாடல், கதை கேட்டு வாசித்தல், பிழையின்றி உச்சரித்து வாசித்தல் போன்றவற்றை கற்றுக் கொடுக்கவேண்டும். சுயசரிதை, கற்பனைக்கட்டுரை, வருணனைக் கட்டுரை, விமர்சனக் கட்டுரை, சிறுகதை, உரையாடல் போன்றவற்றை ஆசிரியர் வாசித்துக் காட்டி மாணவரை ஊக்குவிக்க வேண்டும்.

வாசிப்பின் போது நிறுத்தக்குறிகளைக் கவனிக்காமை, வாசிக்கும் விடயத்தின் கருத்து மீது கவனம் செலுத்தாமை, சொற்களை கருத்தற்ற முறையில் வாசித்தல், சொற்களை விடுதலும் சேர்த்தலும், சொற்களை திரும்பத் திரும்ப வாசித்தல், சொற்களின் கருத்துகளை விட்டு வாசித்தல், முதலாம் எழுத்தைக் கண்டவுடன் பிழையாக வாசித்தல், விபரங்களைத் தவறவிடல் என்பன வாசிப்பின் தவறான பழக்கங்களாகும். இந்தத் தவறான பழக்கங்களை திருத்தி சரியாக வாசிக்கப் பழக்கவேண்டும்.


முடிவாக, வாசிப்பு மட்டுமே சுயமாக சிந்திக்கின்ற, முடிவெடுக்கின்ற தலைமுறையை உருவாக்க முடியும். வாசிப்பு பழக்கம் இன்றைய தலைமுறைக்கும் எதிர்காலத் தலைமுறைக்கும் ஒருபாலமாக இருந்து அறிவைக் கடத்துகின்ற செயலைச் செய்கின்றது. நம்முடைய வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம், கண்டுபிடிப்புகள் போன்றவற்றைநாம் வாசிப்பின் மூலம் நம் முன்னோர்களிடமிருந்து பெற்றோம். நம்மிடமிருந்து எதிர்காலத் தலைமுறையினர் வாசிப்பின் மூலம் பெறவேண்டும். அதற்கு நாம் வாசிப்பை நேசிப்பதோடு நம் சந்ததிகளுக்கும் நேசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டும். புத்தகங்கள் கொள்வனவு செய்யும் செலவு, செலவல்ல மாறாக அது ஒரு முதலீடே. வாசிக்கும் சமூகத்தினை உருவாக்கி வளமான வாழ்வை அனைவரும் வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்னர்கள் வாழ்ந்த இடமான பாலமோட்டை பறையாளங்குளம் காட்டுப்பகுதி

ஆய்வாளர் சு.வரதகுமார்
அபிவிருத்தி உத்தியோகத்தர்.
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை


வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பாலமோட்டை பறையாளங்குளம் காட்டுப்பகுதி தமிழர் மன்னர்கள் வாழ்ந்து வந்துள்ளமையை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் இன்றும் வெளிப்படையாக காணப்படுகிறது.



வவுனியாவிலிருந்து யாழ்நோக்கி ஏ9 வீதியின் மேற்கு புறமாக கண்ணகி அம்மன் கோயிலுக்கு பாதையிலிருந்து 10 மையில்களுக்கு அப்பால் உள்ள பகுதிதான் பாலமோட்டை பறையாளங்குளம் காட்டுப்பகுதி அருகில் சில குடிமனைகள் உள்ளன. இக் காட்டுப்பகுதி பெரும் காடாக பல நூற்றாண்டுகளுக்கு முன் இருந்துள்ளது. திராவிடர்கள் வாழ்ந்துள்ளமையை உறுதிப்படுத்தும் வடிவிலான அழகான சந்திரவட்டக்கல், அதற்கு கீழ் சுரங்க வடிவிலான பள்ளத்தாக்கு, சிறியகட்டிடம், அதன் அருகில் தமிழ் மன்னர் வழிபாட்டுக்கான சிறியகுன்றும் மற்றும் ஆலயம், இறந்தவர்களை அடக்கம் செய்து அதன் மேல் காணப்படும் கருகல்குத்து கால மன்னருக்கும் அவரது சகாக்களுக்கும் உணவு தயாரிக்க பயன்படுத்தப்பட்ட ஆட்டுக்கல் சற்றுதொலைவில் அம்மி என்பன இங்கு காணப்படும் முக்கியவரலாற்று ஆதாரங்களாகும்.

இங்குள்ள சந்திரவட்டக்கல்லை பார்ப்போமாயின் அதில் ஆரம்பித்தில் சில உருவங்கள் செதுக்கப்பட்டு அது அழிவடைந்துள்ளமையை அறியமுடிகிறது. இது பலஆயிரம் வருடங்கள் பழைமைவாய்ந்ததாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இவ்சந்திரவட்டக்கல் அதன் கீழ் உள்ளசுரங்கம், ஆழ்கிடங்குக்கீழ் கடந்த மூன்று ஆண்டுக்குமுன்பு இனம் தெரியாதவர்கள் பூசாரி ஒருவரின் உதவியுடன் மந்திர உச்சாடங்கள் செய்யப்பட்டுபலியிடல் செய்யப்பட்டு குறித்த இடத்தில் மண் வடிவிலான பானை ஒன்று எடுக்கப்பட்டு பொற்காசு எடுக்கப்பட்டதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இக்காட்டுப்பகுதிக்கு அருகில் உள்ள கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். அன்றை தினம் புதையல் தோண்டப்பட்ட சில மணித்தியாலங்களின் பின்பு பொலிசார் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட போதும் புதையல் தோண்டியவர்கள் எவரையும் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி சிலவருடங்கள் இராணுவ பாதுகாப்பில் வைக்கப்பட்டு தொல்பொருள் வரலாற்று சிறப்பிடமாக பாதுகாக்கப்பட்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் பாதுகாக்கப்பட்டு சில நவீன கருவிகளின் உதவியுடன் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு இப்பகுதி தமிழ் மன்னர்கள் வாழ்ந்துள்ளமை உறுதிப்பட்டுள்ளது. நாம் அறிந்தவரை பண்டாரவன்னியன் படைகள் வாழ்ந்ததாகவும் பேசப்படுகிறது. அதற்கு முன் எவ் எவ் தமிழ் மன்னர்கள் இருந்தார்கள் என்பது பற்றிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டதாக இதுவரை தெரியவில்லை. எனவே இப்பகுதியில் வாழ்ந்ததமிழ் மன்னர்கள் பற்றிய ஆய்வுகள் செய்யப்பட்டால் சுவாரியமான பல தகவல்களும் கதைகளும் தமிழர் வரலாற்று ஆதாரங்களும் சிக்கும் என்பதற்காக இவ்விடத்தினை தற்போது திட்டமிட்டு சிலரால் முக்கியத்துவம் வழங்காமல் விடப்பட்டிருக்கலாம் என்றசந்தேகம் எழுகிறது.

இப்பகுதியில் உள்ள ஆட்டுக்கல் மற்றும் அம்மி என்பன தற்போது வடக்குகிழக்கு பகுதியில் எங்கும் இல்லாத வடிவமைப்பில் காணப்படுகிறது. பழைமை வாய்ந் ததமிழ் மன்னர்கள் பயன்படுத்திய உபகரணங்கள் எனப்பலராலும் பேசப்படுகிறது. நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கான சமையல் இப்பகுதியில் இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. என்ன வகையான உணவுகள் சமைக்கப்பட்டிருக்கலாம் என்பது பற்றிய ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்படவில்லை.

இப்பகுதியில் உள்ள குத்துவெட்டுக்கல் பற்றிய விடயத்தை பார்ப்போமாயின் இக் கற்களுக்கு கீழ் மன்னர் அல்லது அவரது சகாக்களின் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் இதற்கு கீழ் மன்னர் தான் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்தி பெறுமதியான உபகரணங்கள் நினைவுச் சின்னங்கள் புதைக்கப்பட்டு சடலம் அடங்கம் செய் யப்பட்டதாக அறியமுடிகிறது. மேலும் இது பற்றிய ஆய்வுகள் எவரும் முன்னெடுக்க முயலவில்லை குத்துவெட்டுக்கல் இறந்தவர் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை அடையாளப்படுத்தவும் அதற்கு வணக்கம் செலுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணியிலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனை இறந்தோர் வழிபடு நினைவுக்கல் என்றும் இதனை சொல்லலாம்.

40 வருடங்களுக்கு இக்காட்டுப்பகுதி பொதுமக்கள் சிலரால் அழிக்கப்பட்டு ஒருசிலரின் உரிமைகொண்டாடப்பட்டுவந்த இடமாகவும் திகழ்கிறது. தற்போது இப்பகுதிபெரும் காடாக இல்லாமல் சிறிய காடாகவே காட்சியளிக்கிறது. இப்பகுதிக்கான முக்கியத்துவத்தை வழங்காமல் கவனிப்பாரற்று இருக்கிறது.

இவ்பகுதியை நாம் எமது வரலாற்று பொக்கிசமாக பாதுகாக்கவேண்டிய இடமாகும். ஆனால் இதற்கு யாரும் முக்கியத்தும் வழங்காமல் விடப்பட்டிருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். எனவே இப்பகுதியை பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். குறிப்பாக அரசாங்கம் முன்வர வேண்டும் என்பது எனது கோரிக்கையாகும்.

இப்பகுதியை வரலாற்று முக்கியத்துவம் வாழ்ந்த இடமாக பேணிப்பாதுக்கப்படவேண்டும் இல்லையேல் இது தனியார் ஆதிக்கத்திற்குட்பட்டு இவ்விடம் அழிக்கப்பட்டு வரலாறு அழிவடைந்துவிடும் வடக்கில் தமிழ் மன்னர்கள் வாழ்ந்த இடங்களில் இவ்விடயம் முக்கிய இடமாக இருந்திருக்கலாம். இதற்கு பெரும் கதைகள் இருக்கலாம். பல்கலைக்கழக மாணவர்கள் தொல்பொருளியலாளர்கள் இதனை ஆய்வுசெய்வதன் மூலம் பல உண்மைகள் எமக்குகிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு எனும் தேடல்.

திருமதி. தெய்வேந்திரன் சீதாலட்சுமி,
நூலகர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை

வாசிப்பு என்பது இன்றைய காலகட்டத்தில் பொரும்பாலும் எல்லோராலும் தொடரமுடியாத தொலைதூரப் பாதையாக காணப்படுகின்றது. காரணம் நவீனயுக போராட்ட காலத்தில் மனிதன் நேரத்துடன் போட்டிபோட்டு அதனைவிட வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றான்.

இயந்திரமயமான அவனது வாழ்வில் அமைதியாய் மனதை ஒருமுகப்படுத்தி வாசிப்பதற்கு அவனுக்கு நேரமில்லை. நூலகத்தினதும், வாசிப்பினதும் உயர்வை உணர்ந்தவன் கூட அதனை பயன்படுத்தமனமிருந்தும் நேரமில்லாத காரணத்தால் அவனிடம் வாசிப்புப்பழக்கம் அருகிக்கொண்டு செல்கிறது எனலாம். அத்துடன் நவீன சாதனங்களான மொபைல் போன், கணினி, தொலைகாட்சி என அவனது கைகளில் விரும்பியுறையும் நவீன சாதனங்களும் அவனின் வாசிப்புப்பழக்கத்தை மழுங்கடித்துக் கொண்டுசெல்கிறது எனலாம். எனவே இவ்வாறானதொரு காலகட்டத்தில் வாசிப்பு பழக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும், தேவைகள் உணர்த்தவேண்டிய கடப்பாடுடையோராய் காணப்படுகின்றோம்.

வாசிப்பு பழக்கம் என்பது சிறுவயது முதலே ஆரம்பிக்கப்படவேண்டிய ஓர் பழக்கமாகும். பசுமரத்தாணியாய் ஆறு மாத பச்சிளங்குழந்தையிடமிருந்தே இதனை ஆரம்பிக்கலாம். தாய் அந்த பிஞ்சுக் குழந்தையைமடியில் வைத்தபடியே உணவு ஊட்டுவதுபோல் வர்ணம் நிறைந்த படங்களைகாட்டி அவர்களின் வாசிப்பு ஆர்வத்துக்கு தீனி இட வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாக அவை தொடர்பான கதைகள், பாடல்கள் என அவர்கள் வளர வளரஅவர்களுக்கு வாசிப்பின் பால் ஓர் ஈர்ப்பு ஏற்படுமாறு அவர்களின் வாசிப்புப்பபழக்கத்தை வளர்த்துக்கொண்டே செல்லவேண்டும். இவ்வாறு ஏற்படும் பழக்கமானது அவர்களை நாளடைவில் வாசிப்பதை ஓர் கட்டாயமான விடயமாக்கிவிடும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

இவ்வாறாக ஆரம்பிக்கப்படும் வாசிப்புப்பழக்கமானது எமக்கு எவ்வாறானவகையில் உபயோகப்படுமென்பதை ஆராய்வோமானால் மிருகங்களிற்கும் பறவைகளிற்கும் அவற்றின் இயைபூக்கம் காரணமாக சில காலங்களுக்குள் வழிகாட்டுதல் இடம்பெற்று பின்பு அவை தமது உலகத்தின் பாதுகாப்பை தாமே உறுதிப்படுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கின்றன. அவ்வாறாயின் ஆறறிவுடைய மனிதனுக்குஏன் 15 – 20 வயதுவரை விருத்தியடைவதற்கு தேவைப்படுகிறது. காரணம் அவர்களிற்கு தேவையான உலக அறிவைநாம் சிறுவர்களிற்கு வழங்கத் தவறிவிடுகின்றோம் என்பது கண்கூடு. அவர்கள் உலகில் வாழ்வதற்குரிய அறிவுத்திறனையும், எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்குரிய அறிவாற்றலையும் அவர்களுக்கு வழங்கத் தவறிவிடுகின்றோம். இவ்வாறானதொரு அறிவுவளர்ச்சியையும் முதிர்ச்சியையும் எமக்கு சிறுவயதுமுதலே ஏற்படுத்தும் வாசிப்புபழக்கத்தின் மூலமே வழங்க முடியும்.

வெற்றி,தோல்வி, இன்பம்,துன்பம், பகை கோபம்,தோழமை,துரோகம் போன்ற இன்னோரான்ன உணர்ச்சி வெளிப்பாடுகளை சமூகத்திடையே எவ்வாறு வெற்றிகொள்வதென்பது இவ்வாசிப்பின் மூலம் உணரமுடியும். அதுமாத்திரமின்றி இவ்வாசிப்பு • பழக்கத்தின் மூலம் உச்சரிப்புதிருந்தும், தன்னம்பிக்கை வளரும், அறிவும் தானகவே வளரும். மேலும் மொழித்திறனை வளர்ப்பதற்குரிய முதற் படி சொற்களை கற்றுக்கொள்வதாகும். இதற்குவாசிப்பே அத்திவாரமாகும். ஓர் புத்தகம் புதையலுக்கு சமமாகும்.

புத்தக வாசிப்பை தொடர்ந்து மேற்கொண்டு உள்ளே செல்லச் செல்ல அளப்பரிய அறிவுச் சேர்க்கை மனிதனைச் சேர்ந்துவிடும். இன்றைய மாணவர்கள் எதிர்கொள்ளும் பாரியசவால்களில் ஒன்று பாடசாலைக் கற்றலுக்குப்பின்னரான தொழில் தேடல் ஆகும். அதற்கான போட்டிப்பரீட்சைகளின் போது தேவையான மொழித்திறன், பொதுஅறிவு போன்றன பல்வேறு வகையான அறிவுச் சேர்க்கையானது தானாகவே மாணவர்களை வந்து சேருவதற்கும் அவற்றினை இலகுவாக எதிர்கொள்வதற்கும் இவ் வாசிப்பு மிகவும் உறுதுணையாகும்.

காலம் என்னும் மண்ணிலே காணப்படுகின்ற அடிச்சுவடுகளான நூல்கள் எம்மை நெறிப்படுத்த உதவுகின்றன. இவ்வாறான தேவைக்கேற்ற நூல்கள் எல்லாவற்றையும் பெறுதல் என்பது எம்மால் சாத்தியாமாகாத ஒன்றேயாகும். இதனாலேதான் நூல் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் பத்திரிகை சஞ்சிகை போன்றவற்றினூடாக பொதுவிடயங்கள் மாத்திரமின்றி நாளாந்த உலக நடப்புகளையும் அறியக்கூடியதாக இருக்கும். காலத்தால் அழியாத நூல் பொக்கிஷங்களை கண்ணாரக்கண்டு வாசித்து பயன் பெறலாம். இவ்வாறான உயிர் போன்ற **"வாசிப்பை நேசித்து வாழ்வில் வளம் பலபெறுவோம்"**.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளிப் பருவத்தின் முக்கியத்துவம்.

திருமதி. ர.பஞ்சலிங்கம்
முன்பள்ளிஆசிரியர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

கல்வி என்பது ஒருவருடைய வாழ்வில் மிகமுக்கியமான ஒரு அம்சமாகும். இது சமூகத்தின் முன்னேற்றம், நகர்வு, வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற பல விடயங்களுக்கு அத்திராரமாய் அமைகின்றது. ஒரு குழந்தை தன் தாயின் கருவறையில் இருக்கும் போதே கற்கத் தொடங்குவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். அந்தவகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முன்பள்ளிப் பருவம் என்பது முக்கியமானஒருகாலகட்டமாகும்.

குழந்தையின் முதல் ஐந்து வருடங்கள் புதிய ஆய்வுகளின் படி மூளையின் 80%வரையான வளர்ச்சி இக்காலத்தில்தான் நிகழ்கின்றது. வளர்ந்தவர் ஒருவர் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களுள் 50%வரை (பிரதான விடயங்கள்) பெற்றுக்கொள்வதும் இளமைப்பகுதிக்குரிய அத்திவாரமும் இக்காலப்பகுதியே ஆகும்.

முறைசார் பாடசாலைக்குச் செல்வதற்கான பயிற்சிகளை வழங்குவதோடு மட்டுமன்றி, வயதுக்கேற்பவாழ்க்கைத் தேர்ச்சிகளைப் பெறும் இடமாகவும் முன்பள்ளி பாடசாலைகள் விளங்குகின்றது. முறைசார் கல்வியைப் பெறுவதற்கான உள ஆயத்தநிலைக்குரிய வயதெல்லையாக இரண்டு வருடம் முதல் ஐந்து வருடம் வரையான வயதெல்லை விளங்குகின்றது. இதுவே முன்பள்ளிப்பருவ வயதெல்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஆகவே நல்ல பழக்க வழக்கம், உடல் ஆரோக்கியம், இயற்கை ஒழுங்கைப் பின்பற்றிகற்றல், அனுபவங்களின் பரப்பளவை விருத்தி செய்வதும், முன் எண்ணக்கருக்கள், தசை நார்கள் விருத்தி போன்ற முற்றான ஆளுமையைக் கொடுப்பது இவ் முன்பள்ளி பருவமே ஆகும்.

முன்பள்ளிப்பருவ கல்வி தொடர்பான சிந்தனைகள் இருபதாம் நூற்றாண்டில் தான் வலுப்பெற்றது. முன்பள்ளிப்பருவ பாடசாலைகள் எவ்வளவு தூரம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அவசியமாகின்றது என்பது தொடர்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியலாளரானபிளாட்டோ கூறுகையில், 'அறிவிலிகளான பெற்றோர்களின் பொறுப்பிலிருப்பதனை விட அறிவார்ந்த ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் பிள்ளை உயர் குணங்களைக்கொண்ட ஆளுமையினால் பெறமுடியும்' எனக்கூறியுள்ளார். இதனூடாக பிள்ளையின் கல்வி விருத் தியில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிக பங்குள்ளது என்பதை வலியுறுத்துகின்றார்.

முன்பள்ளி பருவத்தில் பிள்ளை மையக்கல்வி என்பதும் முக்கியமான தொன்றாகும். பிள்ளை மையக்கல்வி என்பது விருத்திகள் தொடர்பான பொருத்தமான செயல்முறைகள், புலன்கள் ஊடாகவிருத்திபொருள் அறியாது மனப்பாடம் மூலம் அறிவைப்பெறுவதாகும்.

முன்பள்ளிப்பருவத்தின் முக்கியத்துவமறிந்த ஒவ்வொரு நாடுகளும் பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்ற போதிலும் முன்பள்ளிக் கல்வி தொடர்பான பல்வேறு சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதாவது மாணவர்களின் குறைவான பங்குபற்றல்கள், ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் போதாமை, கல்வி அபிவிருத்திக்கு தேவையான நிதிவளம் காணப்படாமை முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே தொகுத்துக்கூறின், மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி ஒரு பிரஜையின் எதிர்காலத்திலும் அவன் கற்கும் முன்பள்ளி காலகல்வியும் அந்தசந்தர்ப்பத்தில் அவர்கள் அடைந்துள்ள அனுபவங்களும் மிகப் பிரதானமானது என்பதைக்கருத்தில் கொண்டு முன்பள்ளிகல்வியை பெறமுடியாத சிறார்கள் எம் மத்தியிலிருப்பின் அவர்களை இனங்கண்டு, அவர்களுக்கான கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களின் எதிர்காலம் சிறப்புற எம்மாலான உதவிகளை சமூகத்தின் ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையில் முன்னின்று செய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பை நேசி..!

திருமதி. தெய்வேந்திரன் சீதாலட்சுமி,
நூலகர்,
வவுனியாதெற்குதமிழ் பிரதேச சபை

வாசகன் என்பதில் பெருமிதம் கொள்
வாசிப்பதால் தான் நீபூரணமடைகின்றாய்
தேசத்தின் மின்மினியாய் நீஒளிர்வதற்கு
வாசிப்புஎன்பதைவரையறையற்றதாக்கிவிடு



தேகங்கள் என்றோவோர்நாள் தீக்கிரையாகும் –நீ
தீட்டியஒன்றைமைதேசங்கள் ஆளும்
பாகங்கள் பிரித்துபங்குபோடமுடியாத– உன்
எழுத்துப் படைப்பாற்றல் என்றும் உலகில் உன் பேர் சொல்லும்.

தியாகியின் ஒருதுளிகுருதியிலும் பார்க்க
அறிவாளியின் பேனாமைமிகப் புனிதமானதென
அன்றோர் அறிஞன் இயம்பிச் சென்றான்.
அதன் அர்த்தம் அகிலம் அறியும் அறிவுபற்றி

ஆயிரம் பலசாலிசாதிக்காதஓர் விடயம்
அறிவுள்ளஓர் மனிதன் கையில் ஆகும்
அவனியிலேஅவன் அனைத்தும் அறிவதற்கு
அளப்பரியஆக்கங்களின் வாசிப்பேகாரணமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்கள் அறிவுப் பெட்டகங்கள்

திருமதி. மகேந்திரன் சுமதி (வாசகர்)
கூமாங்குளம்

*'கற்க கசடறக் கற்பவை*
*'கற்றப்பின் நிற்க அதற்குதக'- வள்ளுவர்*



*கவையாகி கொம்பாகி காட்டகத்தேநிற்கும் மரம்*
*அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே*
*நீட்லோலை வாசியான் நின்றான் குறிப்பரிய*
*மாற்றாதவன் மரம்' - ஔவையார்*

கற்றலாவது ஓர் மனிதனின் வாழ்க்கையில் மிக முக்கியமான விடயமாகும். ஒரு மனிதனின் ஆளுமை அபிவிருத்தியானது புத்தகங்களிலேயே தங்கியுள்ளது. மனிதனின் அறிவு வளர்ச்சியின் மேம்பாட்டினை அனுபவம் ஓரளவிற்கு தந்தாலும் அதனை முழுமைபடுத்துவது புத்தகங்களே. தொழில்துறை வாழ்க்கைக்கான சரியான பாதையினை புத்தகங்கள் வழங்குகின்றன. சமூககலாசார விடயங்கள் பகிரப்படுவதற்கும் பேணப்படுவதற்கும் உறுதுணையாக இருப்பது புத்தகங்களே. இத்தகைய அறிவுவளர்ச்சியின் மேம்பாட்டிற்கு முக்கியத்து வமிக்கதாக காணப்படும் புத்தகங்கள் இன்று இணையப் பாவனைகாரணமாக முக்கியத்துவம் இழந்துகாணப்படுகிறது.

தொலைக்காட்சி, வானொலிமற்றும் இணையதளங்களின் அருகில் நம்மைக் கொண்டு சேர்ந்தாலும் காலங்காலமாகப் பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடியதாகவும் முழுமையான விளக்கத்தை கொடுக்கத்தக்கதாகவும், சிறந்த அறிவுப்பெட்டகமாகவும் திகழ்வது புத்தகங்களே.

இன்று புத்தகங்களின் பாவனைகுறைந்து விட்டதால் மக்களுக்கு வாசிப்புதிறனும் குறையும் பட்சத்தில் கிரகிக்கும் அறிவும், ஆற்றலும் மட்டுப்படுத்தப்பட்டதாக வேகாணப்படுகிறது. குறிப்பாக இளைய சமுதாயத்தினர் புத்தகங்களை வாசிக்க தொடங்கியதுடன் தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகின்றனர். இதற்கான காரணம் புத்தகத்தின் மீதும் வாசிப்பின் மீதும் அவர்களுக்கு காணப்படும் குறைந்தளவான ஆர்வமேஆகும். புத்தகம் வாசித்தலினால் பின்வரும் நன்மைகளை பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை குறைவானமன அழுத்தம்

1. கிரகிக்கும் ஆற்றல்அதிகரிப்பு
2. அறிவுவளர்ச்சி
3. சொல்வளஅதிகரிப்பு
4. ஞாபகசக்திஅதிகரிப்பு
5. பகுப்பாய்வுசிந்தனைத் திறன் விருத்தி
6. நுண்ணறிவுவளர்ச்சி
7. பகுத்தறிவுசிந்தனை
8. கவனச் சிதறல் ஏற்படாமல் தவிக்கப்படல்
9. எழுத்தாற்றல் வளர்ச்சி
10. மனஅமைதி
11. பயனுள்ள பொழுதுபோக்கு நேரம் - போன்றனவாகும்.

எனவே பாடசாலைகளினதும், நூலகங்க்ளினும் கல்வி நிறுவனங்களிலும் முக்கிய இடங்களிலும் புத்தகத்தின் மதிப்பை எடுத்துரைத்து, எதிர்காலசந்ததியினரிடையே புத்தகங்களினதும், வாசிப்பினதும் முக்கியத்துவத்தை அதிகரித்தல் வேண்டும். புத்தகங்கள் தொடர்பான சர்வதேச வாசிப்பு தினங்களை கடைப்பிடிப்பதோடு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல் அவசியமாகும்.

மேலிருந்து கீழ்வாரியாக நாம் புத்தகங்களை படிக்கிறோம் அவை நம்மை கீழ்லிருந்துமேலே உயர்த்திவிடுகின்றது. இந்த உலகிலே புத்தகங்களை விட உயர்ந்த நண்பன் வேறுயாருமல்ல. ஆகவே வாசிப்பு பழக்கத்தை வருங்கால சந்ததியினருக்கு ஏற்படுத்திக் கொடுப்போம் என உறுதிஎடுப்போம்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு வயது முதல் வாசிப்புப்பழக்கம்.
## (தரம் 6-8 கட்டுரை பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை)

செல்வி. நகுலேஸ்வரன் நதுசா
வ/புதுக்குளம் ம.வித்தியாலயம்

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' எனும் வாக்கிற்கிணங்க நாம் சிறுவயதிலிருந்தே வாசிப்புப்பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பு என்பது மனிதனுடைய அறிவைவிருத்தி செய்யும் செயற்பாடு போன்றது. நாம் தினமும் வாசிப்பிற்காக குறைந்தது பத்துநிமிடங்களாவது ஒதுக்க வேண்டும். நாம் செய்தித்தாள்கள், நூல்கள் சுவரொட்டிகள், விளம்பரங்கள் போன்றவற்றை வாசிக்க வேண்டும். வாசிப்பு பழக்கம் ஒரு பிரஜையிடம் நிகழும் நற்பழக்க வழக்கமாகும்.

''தேனிருக்கும் இடத்தினை தேடி மொய்க்கும் எறும்பு போல்'' நாமும் நூல்களை தேடித்தேடி வாசிக்க வேண்டும். இதனால் இது நமக்கொரு பொழுது போக்காகவே அமைகிறது. நாம் இளமையிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை மேற்கொண்டால் எதையும் இலகுவாக வாசிக்க முடியும். இதன் மூலம் எழுத்துப்பிழையின்றி எழுதவும் முடியும். நாம் நல்ல நூல்களை வாசித்து பல பொதுவான விடயங்களை அறிந்து கொள்ள முடியும். நாம் வாசிப்பதன் மூலம் பல நன்மைகளைப் பெறுகின்றோம். பத்திரிகைகளை வாசிப்பதன் மூலம் உள்நாட்டுச்செய்தி, வெளிநாட்டுச் செய்தி, விளையாட்டுச் செய்தி, விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள், ஆரோக்கியம் தொடர்பானவிடயம், பொது அறிவுகள், விடுகதைகள் இவ்வாறு பல விடயங்களளை கற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் பொது அறிவுவளர்ச்சி அடையும், வாசிப்பதால் பூரணமடைகிறோம்.

இக்காலத்தில் அனைத்து மக்களும் சாதனங்கள் மூலம் தகவல்களை அறிகின்றனர். இதன் மூலம் எமது உடலுக்கு பல்வேறு நோய்களும், கண் பிரச்சினைகளும் ஏற்படும் நாம் பாடப்புத்தகங்களை மட்டும் படிக்காமல் நூல்களில் பொது அறிவு சம்பந்தமான விடயங்களை அறியமுடியும். ஒருமனிதன் எவ்வளவு பெரியவழக்கறிஞராகவும், வைத்தியராகவும், கணிதவியலாளராகவும் இருந்தாலும் அவர்கள் வாசிப்பு இல்லாமல் பெரியதுறைகளைநாடவே முடியாது.

நல்ல புத்தகங்கள் நல்ல நண்பர்களுக்குச்சமன் நாம் புத்தகங்களில் நல்லவிடயங்களை மட்டும் வாசிக்க வேண்டும்.ஆனால் இக்காலத்தில் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட விடயங்களைப் படித்து அவர்களுடைய வாழ்க்கை, நேரம் போன்றவற்றை வீணாக்குகின்றார்கள். நாம் ஒரு புத்தகத்தை எடுத்து நல்ல விடயங்கள் இருந்தால் மீளவும் வாசித்து அதை குறிப்பெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். இது நமது எதிர்கால வாழ்க்கையில் பயன்படும் இப்பழக்கத்தை நாம் இளமையிலிருந்து பழகவேண்டும்.

நாம் தொலைக்காட்சி பார்க்கும் நேரங்களை தவிர்த்துவாசிப்பை மேற்கொள்ள வேண்டும். வாசிப்பு ஒருமனிதனின் வாழ்வை உயர்த்தும் செயற்பாடாக விளங்குகின்றது. எமது ஏனைய செல்வங்களான பணம், நகை போன்றவை அழிந்து மறைந்தாலும் நம் வாசிப்புப்பழக்கம் என்றும் அழியாது மறவாது. நாம் இளமையிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தை மேற்கொண்டால் எவ்வளவு பெரிய இடத்திற்குச் சென்றாலும் என்னவிடயத்தை வேண்டு மென்றாலும் இலகுவாக வாசிக்க முடியும்.

நாம் எந்த வொரு பரீட்சைக்கு சென்றாலும் வாசிக்கத்தெரிந்தால் விரைவாக வாசித்து இலகுவாக பரீட்சை எழுத முடியும். நாம் இளமையிலிருந்தே வாசித்தால் எதிர்காலத்தில் சரியானமொழியுடனும், உச்சரிப்புடனும் வாசிக்க முடியும் வாசிப்பு மனிதனின் வாழ்க்கைக்கு முக்கியமானது. இக்காலத்தில் பலர் வாசிக்கும் திறன் இல்லாமல் வறுமையாகவாழ்கின்றனர்.

நாம் வாசிக்கும் போது தெளிவாகவும், கவனமாகவும், சத்தமாகவும் வாசிக்க வேண்டும். எமது அறிவுவிருத்தியடைவதற்கு நல்ல புத்தகங்களை வாசிக்க வேண்டும். இது நமது சிறந்தபயனுடைய பொழுதுபோக்காகவும் அமைகின்றது. எனவே நாம் வாசிப்புப்பழக்கத்தை இளமையிலிருந்தேகடைப்பிடிக்க வேண்டும். வாசிப்புப்பழக்கத்தினை எதிர்கால சந்ததியினரும் மேற்கொள்ளும் வண்ணம் செயற்பட முயற்சிக்க வேண்டும். ஆகவே நாம் வாசிப்புப்பழக்கத்தை மேற்கொண்டு வாழ்க்கையை சிறப்பாக மேற்கொள்வோமாக!

**தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம்
## (தரம் 9-11 கட்டுரை பிரிவில் முதலாமிடம் பெற்ற கட்டுரை)

செல்வி.பாலசுப்பிரமணியம் அபிநயா
வ/புதுக்குளம் மகா வித்தியாலயம்

சிறுவர்கள் என்பவர்கள் ஒரு குடும்பத்தில் மிகவும் தனித்துவம் பொருந்தியவர்களாக காணப்படுகின்றார்கள். சிறுவர்களை வெளிச்சூழலிலிருந்தும் இடையூறுகளிலிருந்தும் பாதுகாப்பது பெற்றோரின் கடமையாகும். இன்றைய சிறுவர்களே நாளைய உலகத்தின் தலைவர்கள் ஆவர். சிறுவர்கள் நிகழ்காலத்தின் சிந்தைகள் மட்டுமல்ல அவர்கள் எதிர்காலத்தின் வெளிச்சங்கள். சிறுவர்களின் குடும்பங்களின் பொருளாதார பிண்ணனியானது எத்தகைள நிலையில் இருந்தாலும் அவர்களின் உடல் உள தேவைகளை பூர்த்தி செய்து உணவு, உடை உறையுள் என அடிப்படைத்தேவைகளின் நிறைவுடன் பாதுகாக்க சிறந்த கல்வியை பெற்றுக்கொள்வதற்காக அவர்களின் வாழ்க்கையினை சீர்செய்வது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகக் காணப்படுகின்றது.

சிறுவர்களின் குடும்பப் பொருளாதாரத்தின் வறுமை காரணமாக அவர்களின் உடல் உழைப்பை பயன்படுத்த பொற்றோர் மூலம் வேலைக்கு தள்ளப்படுகின்றனர். கோத்தடிமைகள் ஆக்கப்படுகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகங்களை சிறந்த ஒழுக்கமுள்ள ஒரு உலகிற்கு அழைத்துச்செல்வதற்காகவே சிறுவர் உரிமைகள் என்பது உருவாக்கப்பட்டன. ஒரு சிறுவனுக்கோ அல்லது சிறுமிக்கோ நிச்சயம் பரிவு பாசம் பாதுகாப்பு அரவணைப்பு என்பன கிடைக்கப்பெற வேண்டியன. ஆவ்வாறு கிடைக்காத சந்தர்ப்பங்களிலேயே அவர்கள் தவறான வழிக்கு இட்டுச் செல்லப்படுகின்றார்கள். மனநோயாளிகளாக மாற்றப்படுகின்றார்கள். வீட்டின் வருமானம் போதாமையினாலேயே பெற்றோர்கள் தொழில்களுக்கு செல்வதுடன் சிறுவர்களுடன் நேரத்தை செலவிட முடியாமல் உள்ளது.

சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் வண்ணம் ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து நான்காம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சங்கத்தால் சிறுவர் உரிமைகளை பாதுகாக்க முதலாவது பிரகடனம் ஏற்படுத்தப்பட்டது எனினும் ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து எட்டாம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் கொள்கை உருவாக்கப்பட்டது. ஆனால் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பதாம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபதாம் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலே அமுல்படுத்தப்பட்டது. ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறாம் ஆண்டு புரட்டாதி மாதம் இரண்டாம் திகதி இருபது நாடுகளால் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்றாம் ஆண்டு நூற்று ஐம்பத்து ஒன்பது நாடுகளால் கைச்சாத்திடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. எமது இலங்கையிலே ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்றாம் ஆண்டு ஆடி மாதம் பன்னிரண்டாம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இலங்கையின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தில் ஐம்பத்து நான்கு உறுப்புரைகள் காணப்படுகின்றன. முதல் நான்கு உறுப்புரைகளிலே சிறுவர்களின் உரிமைகள் யாவும் காணப்படுகின்றன. சிறுவர்களை சமுகத்தில் பாதுகாத்தல் உணவு உடை உறையுள் ஆகிய அடிப்படை தேவைகளை வழங்கல் சிறுவர்களுக்கு சிறந்த கல்வியையும் ஒழுக்கத்தையும் போதித்தல் கலாச்சார தார்மீக நல்ல சிந்தனைகளை மனதில் வளர்த்தல் சிறுவர்கள் அனைவருக்கும் பொதுவாகவே சமனான ஏற்றத்தாழ்வற்ற நோக்கிலே சிறுவர் உரிமைகள் கொண்டுவரப்பட்டன. மேலும் விரும்பிய பிரதேசத்தில் வாழும் உரிமை பெற்றோருடன் இணைந்து வாழும் உரிமை விளையாடும் உரிமை விரும்பிய சமயத்தை பின்பற்றும் உரிமை கல்வி கற்கும் உரிமை என சிறுவர்களுக்கான உரிமைகள் பலதரப்பட்டன. சிறுவர்கள் தம் உரிமைகளை முதலில் எடுத்துக்கொண்டு உரிமைகளில் தமது கடமைகளை சரிவர ஆற்ற வேண்டும்.

இலங்கையின் அரசியலமைப்புச்சட்டத்தின் ஆறாம் அத்தியாயத்தில் தார்மீக சமத்துவமுள்ள கலாச்சாரத்தை மதித்து போற்றக்கூடிய வகையிலே சிறுவர்களை சிறந்த ஒழுக்கமுள்ள சட்டத்தை மதிக்கக்கூடிய கல்வியை சிறந்த முறையிலே கற்கக்கூடிய பிரஜையாக ஏற்றத்தாழ்வின்றி உருவாக்குவதே அரசின் கடமையாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பதின்னான்கு கோட்பாடுகள் காணப்படுகின்றன. அரசியலமைப்புச்சட்டத்தின் மூன்றாவது அத்தியாயத்திலே சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்போம் என்ற தலைப்பிலே சட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. இவற்றை மீறும் சந்தர்ப்பங்களில் உயர் நீதிமன்றத்திலே சட்டத்திற்கு தகுந்த வகையிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பற்றியும் அரசியலமைப்புச்சட்டத்திலே குறிப்பிடப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் முப்பத்து எட்டாவது சட்ட அத்தியாயத்திலே பதினைந்து வயதிற்கு உட்பட்ட சிறுவர்களை யுத்த நடவடிக்கைகளிற்கோ யுத்த பயிற்சி செயற்பாடுகளிற்கோ உட்படுத்த முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நிலையிலே சிறிய கைத்தொழில் நடவடிக்கைகளில் செங்கற்சூழைகளில், பட்டாசு மற்றும் வெடிமருந்து உற்பத்தி இடங்களில் பட்டறை தொழில் இடங்களில் சிறுவர்களையே அதிகம் காணக்கூடியதாகவுள்ளது. அதுமட்டுமல்லாமல் மது மற்றும் போதைபொருள் கடத்தல் தொழில்களிலே பெரும்பாலும் சிறுவர்களையே காணக்கூடியதாகவுள்ளது. அதற்கான அடிப்படை காரணமாக சிறுவர்களிற்கு உணவு உடை உறையுள் போன்ற அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாக்கப்படாமை. பெற்றோரின் அன்பு அரவணைப்பு இன்றி உளத் தாக்கங்களிற்கு உட்பட்டமையே ஆகும்.

இங்கிலாந்திலே ஒரு நீதியரசர் ஈசன்பிரபு என்பவர் தீர்ப்பு வழங்குகையிலே ஒரு தந்தையின் கடமை ஒரு பிள்ளைக்கு எவ்வாறு அமைகின்றதோ அதுபோலவே ஒரு ஆசிரியரின் கடமை அமைய வேண்டும் என கூறியுள்ளார். ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பதாம் ஆண்டு தீர்ப்பு வழங்கும் போது பெறறோரின் கடமையை விட ஆசிரியரின் கடமை சிறந்ததாக காணப்பட வேண்டும் என தீர்ப்பு வழங்கினார். ஒரு சிறுவனின் கடமைகள் பாதுகாக்கப்படும் சந்தர்ப்பத்திலே அச்சிறுவன் சிறந்த முறையில் கல்வி கற்று ஒழுக்கமுள்ள நற்பிரஜையாக நிச்சயம் திகழ்வான் என்பதே திண்ணம்.

உலக சிறுவர் தினமானது ஐப்பசி மாதம் முதலாம் திகதி உலக நாடுகள் அனைத்திலுமே கொண்ணடாடப்படுகின்றது. பதினெட்டு வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் சிறுவர்கள் என்பதை நாங்கள் அனைவரும் அறிந்த விடயமாகும். அச்சிறுவர் தினத்திலே அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு கொண்டாடப்படுபகின்றன.

ஒரு நாட்டின் சிறந்த வளங்களே சிறுவர்கள் என்பது உறுதி. அவர்களே நாளைய உலகின் மகுடங்கள். சிறுவர்கள் என்பவர்கள் தனியானவர்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. இவ்வுலகை அழிவிற்கு இட்டுச்செல்ல ஹிட்லரும் நம் உலகை நல்வழிப்பாதையிலே இட்டுச்சென்ற மகாத்மா காந்தியும் அப்துல்கலாமும் சிறுவர்களாகவே இருந்து வந்தவர்களென்பதை நாம் மறக்கக்கூடாது. சிறுவர்களின் உரிமைகளை பாதுகாத்து உன்னத உலகத்தின் கதவைத் திறப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை விருத்தியில் வாசிப்பின் பங்களிப்பு
## (தரம் 12-13 கட்டுரை பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை)

செல்வி. ரவீந்திரன் மதுர்சனா
வ/பெரியகோமரசன்குளம் ம.வி

"வாசிப்பு மனிதனை பூரணமாக்கிறது" என்பதற்கமைய மனிதன் ஒருவன் சந்திக்க நேரிடும் சவால்கள் மத்தியிலும் இந்த விஞ்ஞான உலகம் பெற்றெடுத்த நவீன யுகத்திலே அவன் அதை வெற்றிகொண்டு வாழவேண்டும் அதற்கமைய தனது அறிவு, சிந்தனை, ஆற்றல் என்பவற்றை வளர்த்துக் கொள்வதற்கு வாசிப்பு மிகவும் பங்குவகிக்கின்றது.

மனிதன் தற்காலத்தில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றான். அவன் முகங்கொடுக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் தீர்க்கும் முறை மற்றும் அந்த பிரச்சினையால் அவனின் செயற்பாடுகள் சிதைவடையாமல் தன் ஆளுமை திறனை கட்டியெழுப்புவதற்கு வாசிப்பு பங்களிப்பு செய்கிறது. நாம் நூல்நிலையங்களிலோ அல்லது ஆசிரியர், நண்பர்களிடமிருந்து புத்தகங்கள், பத்திரிகை என்பவற்றை பெற்றுக்கொண்டு அதனூடாக நம் வாசிப்பு திறனை மேலோக்கி நம்மிடையே காணப்படும் திறன்கள், எதிர்காலசவால்கள் என்பவற்றை தீர்க்கமாக கடந்து செல்லலாம்.

ஒருவன் தனது வாசிப்பு திறனை மேலும் மேலும் வளர்ப்பதன் மூலம் மொழியாற்றல், சவால்களை முகங்கொடுக்கும் தைரியம், சிந்தனை திறன், அவனிடமுள்ள பிரச்சினைகளை சரியானமுறையில் சிந்தித்து சரியான முடிவை எடுத்து உலகில் சிறந்த ஆளுமையுடையவனாக வாழ்வதற்கு வாசிப்பு திறன் பங்களிப்பு செய்கிறது. ஒரு பத்திரிகையை எடுத்து கொண்டால் அதை நாம் வாசிப்போமானால் அதில் நாளாந்தம் நம்மை சுற்றி நடந்த நமது சவால்களுக்கும் உரிய செய்தித்தகவல்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். அதை நாம் வாசிப்பதனூடாக எமக்கு ஏற்படும் அல்லது ஏற்படக்கூடிய பிரச்சினைகளிலிருந்து நாம் இலகுவாக கடந்து செல்லலாம். நாம் ஒரு குழப்ப நிலையும் உள்ளபோது எமக்கு நம் பெரியவர்களை நாடினால் அவர்களின் கருத்துக்களை நாம் சரியான முறையில் எடுத்துக்கொள்வதால் அக்குழப்பநிலையிலிருந்து நாம் விலகி ஒரு நல்ல நிலமைக்கு வருவோம் அதோ போல் நல்ல சிந்தனைத்துளிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலலையின் நீர்க்குமிழிபோல் எமக்கு ஒவ்வொரு புத்தகமும் வாசிப்பதன் மூலம் எமது மொழித்திறனை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை கொடுக்கின்றது.

தமக்குள்ளே ஒவ்வொரு திறமைகளையும் வைத்திருக்கும் மனிதன் அதை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். அச்சந்தர்ப்பத்தைபெற வேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் வாசிக்கும் பழக்கத்தை தமக்கிடையே உருவாக்கி கொள்ளவேண்டும் ஒவ் வொரு மொழிகளுக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் நாம் புத்தகங்களை வாசிப்பதன் மூலம் மொழியாற்றலை வளர்த்துக்கொண்டு இலகுவாக மொழியையும் கற்றுக்கொள்ளலாம். நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்டுள்ள திறமைகள்,மொழியாற்றல்கள், இவ்வுலகிலே நாம் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான வழிகள் என்பவற்றை வாசிப்பதன் மூலம் அதை நம்மிடையே தக்க வைத்து கொள்வதற்கும் மேலும் அதை விருத்தி செய்து கொள்வதற்கும் வழிவகுக்கின்றது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இச்சமூக கட்டுப்பாட்டிலே சிறந்த ஒரு மனிதனாக வாழவேண்டுமென்றாலோ அல்லது ஒரு தலைசிறந்த மனிதன் என சமூகத்தினிடையே போற்றப்பட வேண்டுமானால் அவனின் ஆளுமை விருத்தி செயற்பாடுகள் சிறப்பானதாக காணப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் ஆளுமை விருத்தியை தனக்குள்ளே தேட வேண்டியது இல்லை. தமது ஆளுமையை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும். என்பதை தேட வேண்டும். “தேடல் என்பது உள்ளவரை தினமும் பசி இருக்கும்”. தினம் தினம் ஒவ்வொரு மனிதனும் தேடல் என்ற வகையில் புத்தகங்களில் ஒவ்வொரு விடயத்தையும் தேடித் தேடிகற்கின்றானோ அந்த இடத்தில் அவன் தன் ஆளுமை விருத்தியில் முழுமையடைகிறான். வாசித்து நாம் தேடி எடுத்து கொண்ட கருத்துக்களை நமக்கு ஏற்படும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் வழிமுறைகள் என்பவற்றை நாமே இலகுவாக செயற்படுத்திக்கொள்ளலாம்.

ஒருவன் ஆளுமையுடையவன், ஆற்றலுடையவன் அனுபவமுடையவன், என எப்பொழுது சமூகத்தினிடையே தெரிவு செய்யப்படுகின்றானோ அன்று அவன் ஒரு பூரண மனிதனாகிறான். நாம் அவ்வாறு ஆக வேண்டுமானால் நம் திறன்களை விருத்தி செய்தால் நம் மொழி ஆற்றல் எமக்குள்ளே தானாகவே வந்துவிடும். அப்படி ஒரு ஆற்றல் நம்முள்ளே வளர்வதற்கு நாம் ஒவ்வொரு நிமிடத்தையும் சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டும். மனதை ஒருமைப்படுத்தி புலனங்கங்களை சீர்மைபடுத்தி நாம் ஒரு புத்தகத்தை வாசித்தால் நாம் அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசிக்கப்பழகிவிடுவோம். நமக்கும் வாசிப்பிற்குமிடையே ஒரு சிறந்த நட்பு உருவாகும். அவ்வாறு உருவாகும் நட்பினூடாக நாம் அதை நம்முள்ளே இணைத்துக்கொள்வோம். அது மட்டுமல்லாமல் எம்மிடையே உள்ள ஆளுமை விருத்தி அடையும். இது எமக்கு ஒரு சிறந்த பலமாகும்.

வாசிக்கும் போது நாம் எம்மை அறியாமலே ஒரு நல்ல சிந்தனை ஆற்றலிற்குள் தள்ளப்படுவோம். அவ்வாறு எம் சிந்தனை எப்போது சிறந்த நோக்குடன் வெளிப்படுகிறதோ அன்று அவன் சிறந்த மனிதன் என சான்று பெறுவான். எமது பெரியோர்கள் எல்லாம் எமக்கு அரிய சிந்தனைத்திறனை மேலும் சிறப்பிக்கின்ற வகையில் மிகச்சிறந்த புத்தகங்களைக் கொடுத்துள்ளனர். பசியில் தேடிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிரகளுக்கும் சிறந்த இரையாக அந்த சிறந்த புத்தகங்கள் விளங்குகின்றன. நாம் எமக்கென உள்ள நேரத்தில் சிறு பொழுதை வாசிப்புக்காக ஒதுக்குவோமானால் எமது ஆளுமையைக் கட்டியெழுப்புவதற்கு வாசிப்பு மிகவும் பங்களிக்கும்.

நமக்குள்ளே காணப்படும் கல்வித்திறன், கலைத்திறன் என்பவற்றை வெளிப்படுத்துவதற்கு தேவையான ஊடகமாக நூல்களும் நூல்நிலையங்களும் படைக்கப்பட்டுள்ளன. அதை நாம் சிறந்த முறையில்பயனுடையதாக மாற்றிக்கொள்ளவேண்டும். அவ்வாறு பயனுள்ளதாக மாற்றியமைப்பதற்கு எமக்கு பல அறிவுவிருத்தி அனுபவ விருத்தி என்பன காணப்படவேண்டும். இவ்வாறான விருத்திகள் எம்மிடையே நடைபெறுமானால் அது எம் வாசிப்பு திறன்களின் மூலம் கிடைத்த ஒரு வரமாக கொள்ளவேண்டும். ஒரு மனிதன் நாட்டின் நற்பிரஜையாகத் திகழ்வதற்கு எமது ஆளுமைத்திறனை நாம் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும். ஆகவே முழுமையாக எம் ஆளுமை விருத்தியில் வாசிப்பு மிகவும் பங்களிக்கின்றது.

எம் ஆளுமை விருத்தியினால் எமக்கு பயன் கிடைப்பதனால் அதை நாம் வளர்த்துக்கொள்வதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் வாசிப்பு என்னும் மெழுகுவர்த்தி தன்னை உருக்கி ஒளிரும் ஒளி மூலம் எமது ஆளுமையை இவ் உலகிற்கு சிறந்த வகையில் பயனுடையதாக மாற்றியமைக்கும். அதுபோல் எம் ஆளுமை விருத்தியில் வாசிப்பு பங்களிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமுன்னேற்ற சிந்தனைகள்

பிரபஞ்ச–மனோதத்துவவியலில் அதிதஆர்வமும் - ஆராட்சியும் கொண்ட
யதார்த்த-தத்துவார்த்த ஜோதிடஆய்வாளர்
**திரு.V.M.N. திலகன் (ராகவேந்திரா)**–B.A ( Hons) ,
Dip In Astro, Dip In Vasthu Science, Dip In Saiva siththantham,
Following B.A (Astrology) at Sasthira University in India

மனிதர்கள் வாழ்வில் நடைபெறுகின்ற இன்பதுன்பங்கள்,உயர்வு தாழ்வுகள் அனைத்தும் உலகில் வாழ்கின்ற-- வாழ்ந்து மறைந்த-- வாழப்போகின்ற- அனைத்து மனிதர்களுக்கும் பொதுவானது. போராட்டமும் செயல் ஊக்கமுமே அனைத்து வெற்றிகளையும் பெற்றுத்தரும் இதனை உணர்ந்து கொள்ளாது எனக்குமட்டுமே துன்பம்- துயரம்- தோல்வி என துவண்டு விடும் கோடான கோடிம னிதர்களின் இயலாமை மனதை மாற்றி அமைக்கநடைமுறை யதார்த்ததுடன் கூடிய உண்மைக் கருத்துக்களை கொண்ட சுய முன்னேற்ற சிந்தனைகள் இங்கு தங்களுக்கா கவிதைக்கப்படுகின்றது.

**வட்டத்திற்குள் வட்டமடிக்காதீர்கள் ஆற்றல் பெருகாது - 01**

இன்றைய உலகில் மிக அதிகமானவர்கள் தமக்கு பழகிய தெரிந்த வட்டத்திற்குள்ளேயே வாழுவர் செயற்படுவர். ஒரு ஆற்றல் ஒரே இடத்தில் ஒரே வகையான தன்மையினால் அதிகமாக ஏற்படுவதில்லை. இது ஒரு விஞ்ஞான அறிவியல் உண்மை என்பதை தாங்கள் அறிவீர்கள்.. வேறு வேறான பொருட்கள் ,சூழ்நிலைகள், புறத்ததாக்கதால் தான் மிக அதிகமாக ஆற்றல் பிறக்கின்றன்.

இதனால் தான் இன்றைய அறிவியல் வளர்ச்சியால் ஒரே ரரத்த உறவில் திருமணம் செய்வதை விட உறவற்ற வேற்று பெண்களை திருமணம் செய்தால் அறிவு பூர்வமான ஆற்றலான ஆரோக்கியமான பிள்ளைகள் பிறக்கின்றன.

ஜோதிடத்தில் கூட ஒரு கிரகம் வேறுகிரகத்தின் பார்வை சேர்க்கை இன்றி இருந்தால் அதன் பலன் இயக்கம் மிகக்குறைவாகவே இருக்கும். வாழ்வில் முன்னேறி சாதித்தவர்களை பார்த்தீர்கள் என்றால் ஒவ்வொருவரும் தாம் பிறந்த சொந்த தேசங்களை இடங்களை விட்டு வேறு இடங்களிற்குசெ சன்றுவாழ்தவர்கள் சாதித்தது தான் மிக அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு இல்லாமல் தமது சொந்த இடத்தில் ஒரே வட்டத்துக்குள் வட்ட மடித்துக்கொண்டிருந்திருந்தால் மிகச்சாதாதரண மனிதராகவே வாழ்ந்திருப்பவர்.

இந்த வகையில் பல உதாரண மனிதர்களை நீங்கள் பார்கக்கலாம் சாதாரண பேருந்து நடத்துனராக இருந்து மாநிலம் மாறிவந்து இன்றைக்கு தழிழ்நாட்டின் சிறந்த நடிகராக உள்ளவர் தான் ரஜனிகாந். இலங்கையில் பிறந்து சிறுவயதில் இந்தியா சென்று தமிழ்நாட்டின் முதலமைச்சாரகவும் சிறந்த நடிகராகவும் மக்கள் வசியமானவராகவும் உருவானார் அதே போல நடிகர் நாசாரை குறிப்பிடலாம். கிராமங்களில் இருந்து சென்னை நோக்கி சென்று துன்பத்தினையும் சிரமத்தினையும் அனுபவித்து பின்னாளில் சிறந்தநடிகராக, எழுத்தாளராக இயக்குனராக, தொழில் அதிபராக, விஞ்ஞானிகளாக உருபானவர்கள் மிகஅதிகம்.

அதே போல நகரங்களில் தொழில் செய்து சிறந்த முன்னேற்றத்தினை அடைந்துள்ள பெரும் தனவந்தர்கள், முதலாளிமார்கள், வர்த்தக பிரமுகர்களின் கடந்தகால வாழ்வினை பார்ப்பீர்களாயின் சிற்றுர்களில் இருந்து வேலையாட்களாக நகரத்திற்கு வந்து படிப்படியாக முன்னேறிதற்போதைய நிலையினை அடைந்திருப்பார்கள். இவர்கள் அனை வரும் பிறந்த ஊரிலையே வட்ட மடித்திருந்தால் மிகச்சாதாரண மனிதர்களாகவே வாழ்ந்திருப்பார்கள்.

எமது முன்னோர்களும் பல சிந்தனைகளில் பலவாறு இதனை குறிப்பிட்டுள்ளனர் **''செக்கு மாடு போல''**ஒரே இடத்தில் சுற்றுவது எந்த முன்னேற்றமும் ஏற்படுவதில்லை. ''**குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவது போல'', கிணற்றுத்தவளை போல, கோயில் யானை போல எனபலவாறு உதாரணங்களை கூறியள்ளனர். இதன் தன்மை ஏனையவற்றில் இருந்துமாறுபாடானவையாகவும் ஆற்றல் அற்றவையாகவும் அமைந்திருக்கும் என்பதை புரிந்துகொள்ளுங்கள்.**

**சுயமுன்னேற்ற சிந்தனை -02**

பிறப்பு நிலையில் வறுமையின் கீழ் நிலையில்- ஒதுக்கப்பட்ட நிலையில் - தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்து அனைத்தையும் வெறியுடன் சுமந்து கொண்டு சுமையுடன் சுமையாக மண்ணில் புதையுண்டு பிறந்த சுவடு தெரியாமல் அழிந்து மறைந்து சிதைந்து போகாமல் வைராக்கியமனதுடன் வெறி கொண்டு வெற்றிக்கொடி நாட்டிய சாதனையாளர்களின் வரலாற்றினை புரட்டிப்படியுங்கள். மீண்டும் மீண்டும் படியுங்கள் மனமொன்றி மனதில் பதியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எப்படி தமது பலவீனங்களாக தம்மை சுற்றிக்கட்டியிருந்த

**இரும்புச்சங்கிலிகளை எப்படி உடைத்தெறிந்தார்கள்.?**

**எப்படி தமது இலக்கினைதீர்மானித்தார்கள்?**

**தமது இலக்கினை அடைவதற்காக அவர்கள் செய்த தியாகம் என்ன?**

**அவர்கள் தமக்காக தமது வெற்றிக்காக பின்பற்றிய யுத்திகள், வழி முறைகள், என்ன?**

**வெற்றி பெற்ற பின் அவர்கள் வெளிப்படுத்திய சிந்தனைகள் என்ன?**

இவை தான் தங்கள் வெற்றியின் வழிகாட்டி நட்சத்திரங்கள்.

**பிறக்கும் போதே அனைத்து வளங்களுடன், வசதிகளுடனும் பிறந்தவரின் போதனைகள் எமக்கு பயன்படாது புரிந்து கொள்ளுங்கள்.**

**சுயமுன்னேற்றசிந்தனை -03**

**ஒன்றன்றிரு-ஏகக்கோட்பாடு-ஓர் எண்ணத்தியானம் -ஓர் எண்ணவைராக்கியம்**

நீங்கள் வாழ்வில்- அறிவில் -ஆற்றலில் -சமூகத்தில் சாதனைகள் செய்யவிருப்பம் கொள்வீர்களாயின் உங்கள் இலக்கினை தீர்மானியுங்கள். ஒருவர் பல துறைகளில் பல விடயங்களில் மிளர முடியாது. அது முடியாதகாரியம். ஏன் எனில் ஒரு மனிதனின் ஆயுள் வரைக்கும் முயன்றாலும் தான் சார்ந்த ஒரு துறையில் கூட கரைகாண முடியாது. அந்த அளவிற்கு அதன் விஸ்தாரம் மிகப் மிகப்பெரியது. இவ்வாறு இருக்கையில் நாம் ஒவ்வொரு வரும் பல பல இடங்களில் நிலையற்ற அகலக்காலை வைக்கின்றோம். இது எம்மை எதிலுமே நிலையான வெற்றியை பெறமுடியாமல் செய்துவிடும்.

எனவே எதில் ஈடுபாடு அதிகமாக உண்டோ அல்லது எதில் அதிக ஆசையும் வெறியும் உண்டோ எவ்விடயம் அதிகமான சுகமாக- சுவையாக தங்களால் உணரப்படுகின்றதோ அதனை இலக்காக்கி கொள்ளுங்கள். அது மருத்துவம்- பொறியில்- ஆன்மீகம்- விளையாட்டு- அரசியல்-என.. இப்படி பல ஆயிரம் விடயங்களை குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சிறந்த உதாரணம் இரண்டாம் உலக மகாயுத்தத்தில் மோசமான அழிவினை கண்டு பீனிக்ஸ் பறவை போல அழிவில் இருந்து மீண்டெழுந்த நாடுயப்பான். விரைவாக அரசியல் தொழில்நுட்பபொருளாதாரத்தில் அசுர வேகத்தில் முன்னேறியது. எப்படி ? அவர்கள் வரலாற்றில் பின்பற்றிய கோட்பாடு தான் காரணம். அது தெய்வீக கோட்பாடு. சொல்வதைச்செய்வது . **ஏன் எதற்கு** எனகாரணங்களை ஆராய்ந்து கொண்டு இருப்பதில் நேரத்தினை செலவழிப்பதில்லை. அரசகட்டளையை தெய்வீக கட்டளையாகக் கொண்டு சிரமேற்கொண்டு வைராக்கியமாக செயற்படுவது இது தான் யப்பானிய மக்களின் கொள்கையாக இருந்தது. இதனால் தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள். இங்கு அவர்கள் பின்பற்றியது ஏகக்கோட்பாடு.

இன்றும் யப்பானில் பார்த்தீர்கள் என்றால் ஒரு தொழில்சாலையில் உற்பத்தி செய்யப்படும் ஒரு இயந்திரத்திற்கு தேவையான பகுதிகளை கிராமப் புறங்களில் உற்பத்தி செய்து அல்லது தயாரித்து தொழில்சாலைக்கு கொடுப்பதை காணலாம். இது தனித்தனியான துறைசார்ந்த சிறப்புத்தேர்ச்சியையே காட்டுகின்றது.

நீங்களும் வீணாணமாயை தன்மையினால் சுழிகாற்றில் அடிபட்டு அங்கும் இங்கும் அலையும் கோழி இறகு போல அமையாது. எதற்கும் அசையாத உறுதியான மலையாக நிலைத்திருங்கள். ஒன்றினை நினைத்து ஒன்றிலே மூழ்கி ஓர் எண்ணத்தினை மூச்சிலே கலந்து சுவாசித்து இருங்கள். வெற்றி உங்கள் காலடியில் மண்டியிடும்.

### தொழில் நுணுக்கங்களை கற்றுக்கொள்ளுங்கள் -04

அதிக மானவர்கள் சொந்தமாக தொழில் செய்வதற்கு ஆசைப்படுவார்கள், ஆனால் அத்தொழிலின் நெளிவு சுழிவுகளையும் நுட்பங்களையும் அத்தொழிலில் உள்ள செயற்பாடுகளையும் அறிந்திருக்க மாட்டார்கள். அவர் ஒருவர் தொழில் செய்து நன்றாக உழைக்கின்றார் நாமும் செய்தால் அதே மாதிர ீஉழைக்கலாம் என அவசரம் அவசரமாக தொடங்கி அனைத்தையும் இழந்து நிற்பார்கள். இதனைத்தான் வள்ளுவப்பெருந்தகை அழகாக தன் குறளில் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுய முன்னேற்ற சிந்தனைகள்- 05

**வாழ்வின் வெற்றிக்கு சரியான பாதையை தேர்ந்தெடுங்கள்**

எமது வாழ்க்கை- மற்றும் காலம் வரையறுக்கப்பட்டது- குறுகியது.- எல்லைக்குட்பட்டது. எமது வெற்றிப் பயணம்- இலக்குஎல்லை அற்றது– முடிவற்றது. எனவே நீங்கள் கால நேரத்தினை வீணாக்காது சரியான பாதையினைத்தேர்ந்தெடுக்க வேண்டிது மிக மிக அவசியமானது.

நீங்கள் இதனை பிறரைக்கொண்டு செய்ய முடியாது. அது உங்களுக்குள் இருந்து தான் வெளிவர வேண்டும். அது தான் சரியான இலக்காக அமையும். பிறரால் திணிக்கப்படுவது அல்லது பிறரிடம் இருந்து வருவது உங்கள் இலக்கல்ல.

உங்களின் சரியான இலக்கு. உங்கள் மனதில்- அறிவில்- கலந்துள்ளது. சாதாரண நிலையில் இது வெளிப்படாது. ஆதனை தனியாக பிரித்தெடுக்க வேண்டும். இதனை நீங்கள் தனித்திருக்கையிலையே வெளிக்கொண்டு வரலாம். அல்லது உணரலாம்.

ஆகையால் தங்கள் சிந்னைகளை தூண்டக்கூடிய இடங்களில் தனிமையில் உங்கள் மனதுடன் அறிவுடன் விவாதியுங்கள். அதன் மூலமாகத்தான் உங்கள் இலக்கை தனித்து வெளிக்கொண்டு வரலாம்.

எமது மனம் எங்கு- எவ்விடத்தில் லயித்து ஒரு நிலையில் நிற்கின்றதோ அங்கு தான் தங்கள் ஆற்றல் மையம் தூண்டப்படும்.

பொதுவாக இயற்கை றம்மியமாக பச்சைபசேலென்ற இடங்கள்

மலையடிவாரங்கள்- மலைஉச்சிகள்- ஆலயங்கள்- வரலாற்றுபெருமைமிகு இடங்கள்

நீர் கடல் ஆற்றுபகுதிகள்- நீர் அருவிகள் ஓடும் மணற்தரைகள்

அடர்ந்தகாடுகள்- முற்றத்துநிலா-

பூங்காவனங்கள்- வயல்வெளிகள்- பாலைவனங்கள்- பழத்தோட்டங்கள்- மணல்மேடுகள்

வாசிகசாலைகள்-நல்ல குரு உள்ள இடங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இடங்களில் தனித்திருங்கள் உங்களுக்குள் மறைந்துள்ள ஆற்றல் அற்புதமாக வெளிப்படும் அதிசயத்தினைக் காணுங்கள். சிக்கனப்பிடியுங்கள். அங்கிருந்தே முதல் அடியினை எடுத்துவையுங்கள். வெற்றி உமதே.

சுயமுன்னேற்றசிந்தனைகள்-06

**காலச்சூழ்நிலைக்கு ஏற்ப எமது செயற்பாடுகளை மாற்றுவதே முதல் வெற்றி.**

**நல்ல காலம் கெட்ட காலம் என்பது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்ளை கொண்டமைந்தது.**

காலச்சுழ்நிலைக்கு ஏற்ப அதனை வேறு வகையான விடயத்திற்கு நல்ல காலமாக மாற்றி அமைக்கலாம். ஆனால் அது இலகுவான விடயம் அல்ல ஏன் எனில் பிறந்தது முதல் பழக்கப்படுத்தப்பட்டு கடைப்பிடிக்கப்பட்ட விடயத்தினை திடீரெனமாற்றுவது அவ்வளவு சுலபமானகாரியம் அல்ல.

எனவே பழக்கப்பட்ட அல்லகைக்கொள்ளப்பட்ட அல்லது நீண்டகால பழக்க வழக்கங்களால் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு சீரான செயற்பாட்டுத்தன்மையில் மாறுபாடானமாற்றம்- விடயம்- செயல்- தங்களுக்கு கெட்ட -அல்லது- கூடாத - அல்லது பிரச்சனையான காலமாகத் தெரிகின்றது. அல்லது தாங்கள் உணர்கின்றீர்கள்.

நீங்கள் உங்கள் வட்டத்தினை விட்டு வெளியே வாருங்கள். வட்டத்தில் நீங்கள் இருக்கும் வரை இது அவ்வாறு தான் தெரியும். எப்படிப்பார்த்தாலும் அது மாறப்போவது இல்லை.உங்கள் பார்வையில் மாற்றம் இல்லை எனவே விளைவும் மாறாது.

இதற்கு உதாரணம் பார்ப்போம் எமது வரலாற்றுக்காலத்தில் நாம் பார்க்கும் தொலைக்காட்சியை எடுத்துக்கொள்ளுங்கள். கடந்த 60 வருடங்களுக்கு முன்னர் தொலைக்காட்சியில் நாம் கண்டகாட்சிகள் தெளிவற்று தெரிந்தன. இன்னும் 30 வருடங்களுக்கு பிறகு சற்றுத் தெளிவாக தெரிந்தன. மேலும் 10 வருடங்களுக்கு முன்பு LCD என்பதன் ஊடாக மேலும் தெளிவாக தெரிகின்றன. தற்போது LED மற்று அதனை விடதொழில்நுட்பம் கூடியதொலைக்காட்சியில் மிகமிக தெளிவாகத் தெரிகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அர்த்தம் என்ன எனபார்த்தோமானால் நாம் பார்த்த காட்சியில் எந்த விதமாற்றமும் ஏற்படவில்லை. அது என்றும் நிலையான காட்சியாகவே உள்ளது. ஆனால் அதனைப் பார்க்கின்ற ஊடகத்தின் (தொலைக்காட்சியின்)தொழில்நுட்பகுறைநிறைகளே அதனை மாற்றிமாற்றி காட்டுகின்றன.

எனவே தாங்கள் பழமையான- பழக்கப்பட்ட மனோபாவத்தின் ஊடாகதங்கள் செயலின் பலனை பார்க்கின்றீர்கள். ஆகையால் அது தெளிவற்றே (சாதக - பாதகமாக) தங்களுக்கு உணர்த்துகின்றது. அதனை மாற்றி நவீன சிந்தனைகள் ஊடாக அதனைப் பாருங்கள். மிகத்தெளிவாக அது புரியும்.

**இதற்கு சிறு உண்மைச்சம்பவம் ஒன்றினை உரைக்கின்றேன்.**

ஒரு ஆண் ஒரு பேருந்து (BUS) ஒன்றுவைத்துதொழில் செய்கின்றார். அவர் அதனை தனிப்பட்ட பயணங்கள்-பாடசாலை மாணவர்களுக்கான சுற்றுலா இடங்களை பார்ப்பதற்கு அழைத்துச்செல்லல். திருமணம் மற்றும் ஏனைய சுபகாரியங்களுக்கு பயண்படுத்தல். இது தான் அவரது தொழில்.

அவர் பாவிக்கின்ற பேருந்து நிதி நிறுவனத்தினம் லீசிங் (குத்தகை) அடிப்படையில் எடுக்கப்பட்டது. அதே நேரம் மீதிப்பணம் வெளி ஆட்களிடம் வட்டிற்கு வாங்கியது கடந்த 10 வருடமாக அத்தொழிலைச் செய்கின்றார். எந்த முன்னேற்றமும் இல்லை. வெளிவட்டி கூடி தற்போது 20 இலட்சம் வந்து விட்டது. மனைவி- பிள்ளைகளுக்கு சிறுசேமிப்புப்பணமோ அல்லது சிறிய அளவிலான நகைகளோ இல்லை.(காதில் தோடு கூட இல்லை) நாளாந்தம் கடன் தொல்லை. வெளியே தலைகாட்ட முடியவில்லை. வாகன ஓட்டமும் குறைவு.

கடன் தொல்லைகளால் மனைவி பிள்ளைகள் தினம் தினம் வேதனை அடைகின்றன.

இதனை விட லீசிங் கம்பனிக்கு 20 இலட்சம் செலுத்த வேண்டிய மீதிப்பணம் உள்ளது.

**இந் நிலையில் குறித்தவாகன உரிமையாளரின் சிந்தனை எப்படி உள்ளது?**

எனக்கு எனது இந்தவாகனம் (பேருந்து) மிகவும் பிடித்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை விற்கவிருப்பம் இல்லை

நான் இதனை விற்றால் என்னைப்பற்றிபிறர் என்ன நினைப்பார்கள்

எனக்கு வேறுெ தாழிலில் விருப்பம் இல்லைஅல்லதுதெரியாது

சிறிய வயதில் இருந்து வாகனந்தான் எனக்கு பிடிக்கும் சிறியவயதில் கூலிக்கு வாகனம் ஓடி கடந்த 10 வருடமாகத்தான் சொந்தமாக வாகனம் வாங்கி ஓடுகின்றேன்.

இவ்வாறு பலபல விடயங்களை அடுக்கிக் கொண்டுசென்றார்.

இதுதான் நான் இங்கு குறிப்பிட்டுள்ள சிந்தனை இவர் (வாகனஉரிமையாளர்) ஒருவட்டத்திற்குள் தான் நிற்கின்றார். வெளியே வந்துபார்க்கின்றார் இல்லை.

இவரை மாற்றுவதற்கு அவரது மனைவி மற்றும் நண்பர்கள் எடுத்த எந்த முயட்சியும் பலன் அளிக்கவில்லை.

இவரை அவர் மனைவி என்னிடம் அழைத்து வந்தனர் ஜோதிடம் பார்ப்பதற்கு. நான் இவரை அவரது வட்டத்தினை விட்டு வெளியேஎ டுத்தேன். அவரது மனைவியின் கண்களில் ஆனந்தக்கண்ணீர். ஏப்படிச் செய்தேன். யாராலும் காலப்பலனை மாற்ற முடியாது. வுான மண்டலத்திற்கு (பிரபஞ்சத்திற்கு) சென்று இவருக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற கோளைத் தூக்கி 90 பாகையில் வைக்கமுடியாது.

தற்போதைய காலச் சூழ்நிலைக்கு ஏற்ப எமது செயற்பாடுகளை மாற்றுவதே முதல் வெற்றி.

நான் அவரை வட்டத்தினை விட்டுவெளியே எடுக்க கையாண்டயுத்திகள்

நான் அவரை தனது வாகனத்தினை விற்குமாறு கூறினேன்.

இன்றைய பெறுமதிக்கு கணக்கு பார்த்ததில் அதனை விற்றால் லீசிங் கம்பனிக்கும் கடனை முழுமையாக தீர்வை செய்து மீதிப்பணத்தினை கொண்டுவெளிக் கடனையும் முழுமையாக தீர்வை செய்யமுடியும். மீதிகைக்கு 03 இலட்சம் வரும்.

இதன் மூலமாக கடன் தொல்லை- மன அழுத்தம் உ டனடியாக தீரும்.

அவரது உறவினர் ஒருவர் வெளிநாட்டில் கட்டாரில் பலகாலமாக சேவையாற்றுகின்றார். அவர் இவரை அங்கு 03 வருடங்களுக்குவாகனச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதியாக வேலை எடுத்து தருவதாகவும் மாதச்சம்பளம் ஒரு இலட்சம் எடுக்கலாம் எனவும் கூறியுள்ளார். ஆவரை வெளிநாடு சென்று 03 வருடம் கடமையாற்றுமாறும் வரும் பணத்தில் மாதம் 70 ஆயிரம் ரூபாயை சேமிக்குமாறும் பின் ஊர் வந்ததும் தங்கள் விருப்பம் போல புதிதாக சொந்தபணத்தில் வாகனம் எடுத்து உழைக்கு மாறு அறிவுரை கூறினேன். வேளி வட்டி இல்லாததால் வரும் வருமானம் பெருகும் என்றேன்.

மூன்று வருடங்களின் பின்னர் தங்களுக்கு நீண்டகாலம் நல்லகாலமாக உள்ளதால் விரைவாக தங்களிடம் உள்ள ஒரு பேருந்து பல பேருந்தாக மாறி வசதி படைத்தவராகவருவீர்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையினை ஜாதகரீதியாக அவருக்கு ஏற்படுத்தினேன்.

மட்டற்றமகிழ்ச்சியை அவர் அடைந்தார். என்னை இரு கை எடுத்து வணங்கினார். அவர் மனைவியின் கண்களிலும் ஆனந்தக்கணணீர்..

இப்போது சொல்லுங்கள் அவருக்கு தற்போது நல்லகாலமா? கூடாதகாலமா?

இவ்வாறு எம்மில் பல இலட்சம் பேர் உள்ளோம். தயவு செய்து வட்டத்தினைவிட்டு வெளியே வந்து யதார்த்தமாக பாருங்கள் உங்களுக்கான விடியல் வெளியேபிரகாசமாகத் தெரியும்.

## சுயமுன்னேற்றச் சிந்தனை-07

## தொழில் முன்னேற்றரகசியம்

நாம் செய்கின்ற தொழிலில் இலாப நட்டம் இயற்கையானது. ஆனால் அதிக மானவர்கள் தமது தொழிலில் இலாபத்தினையே அதிகமாககாண்கின்றனர் பலர் நட்டத்தினையே அதிகமாக காண்கின்றனர். பலர் எழுச்சியும் வீழ்ச்சியுமாக தட்டிதடுமாறு பயணிக்கின்றனர்.

இதற்கான காரணங்களை ஆராயின் தொழிலில் முன்னோக்கிச் சென்று கொண்டுள்ள அனைவரும் தாம் செய்கின்ற தொழிலில் பாதகங்களையோ-குறைகளையோ-வீழ்ச்சிகளையோஅறிவதும் இல்லை அதனை விட மிகச்சிறப்பான தன்மை தமது தொழிலில் உள்ள சாதகங்களையும் உயர்வுகளையும்-நன்மைகளையுமே என்றும் உணர்பவர்களாகவும், விரும்புபவர்களாகவும் உள்ளனர்.

இதனால் அவர் மனம் போல அல்லது அவர் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கு ஏற்றபடியான தன்மையில் அவர் தொழில் நிறுவனம் இயங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மனதில் என்றும் வீழ்ச்சி இல்லை அதே போல அவர் தொழிலிலும் என்றும் வீழ்ச்சி இல்லை.

எனவே தொழில் வீழ்ச்சி தோல்வி எனமனக்கவலையில் உள்ள அன்பர்களே தாங்கள் தங்கள் தொழிலில் வெற்றி பெறுவதற்காக உங்கள் மனதினை மாற்றுங்கள். நல்லதையே உணருங்கள். வெற்றி உங்களுகே.

**இதற்கானசிறியஉதாரணக்கதைஒன்றுபார்ப்போம்:.**

-புதிதாக கட்டிய வீடு ஒன்று விற்பனைக்கு வந்தது. ஆதனை வீடு வாங்கி விற்பனை செய்வதை தொழிலாகக் கொண்ட இருவர் சென்று பார்வையிட்டனர்.

ஒருவர் அவ்வீட்டில் அறைகள் சில வாஸ்த்துப்படி அமையவில்லை- முன்பக்கம் ஒடுக்கமாகஉள்ளது. வீடு உள் வீதியில் தான் உள்ளது- வீதிகாணாது-சில இடங்களில் வெடிப்புவிழுந்துள்ளது எனவே கட்டுமானம் சீரான அளவில் செய்யப்பட்டிருக்கவாய்ப்பில்லை- காணி உறுதியும் அரசகுத்தகைஆவணந்தான் எனமேலும் பலகுறைகளைபட்டியல் இட்டுவாங்குவதைதவீர்துவிட்டார்.

மற்றவர் வீட்டின் அகல நீளங்களை கணக்கெடுத்தார்- **03** மாடி வீடு மொத்தம் **18** அறைகள்- மூன்றுமாடியிலும் தனிப்பட்டகுளியல் மலசலகூடஅறைகள் உண்டு- மூன்றமாடிக்கும் தனித்தனிமின்சார இணைப்பு உண்டு- வீட்டைக்கட்டியவர் தனக்காகவே கட்டியதை கேட்டுதெரிந்து கொண்டார். இன்றைய பெறுமதியில் அதனை கணக்கெடுத்தார். வீட்டைதான் வாங்குவதாகக் கூறி அன்றே முன்பணம் சிறிய தொகையை கொடுத்தார். ஆவணங்களைச ரிபார்த்த பின் இரு வாரங்களில் வீட்டை வாங்கினார். வீடு அவரால் **1.5** கோடி ருபாவிற்கு வாங்கப்பட்டது. அதனை அவர் ஒரு இரு மாத இடைவெளியில் மீண்டும் வேறு நபருக்கு அதில் உள்ள வசதிகள் நன்மைகளை சுட்டிக்காட்டி **2** கோடி ருபாவிற்கு விற்பனை செய்தார். அவர் பெற்ற இலாபம் **50** இலட்சம்.

(இது ஒரு உண்மைச்சம்பவம் )

இதில் இருந்து நீங்கள் என்னயோசிக்கின்றீர்கள்? நான் இங்கு குறிப்பிட்டது தான். எதிலும் சாதகங்ளையும் நன்மைகளையுமே நோக்க வேண்டும். பாதகங்களை பார்த்துக்கொண்டிருந்தால் (குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை) என்பது போல் எதுவுமே அமையாது.

**மாறுங்கள் எதிலும் நல்லதையே காணுவோம் வெற்றி எமதே.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியோரைப் பேணுவோம்

செல்வி. த.மதுர்ஜா(வாசகர்)
கூமாங்குளம், வவுனியா

தற்கால சமூகத்தில் ஒரு பெரும்புள்ளியாக திகழ்பவர்கள் இவ் முதியோர்கள் ஆவர். இவர்கள் எமது வயதின் இரு மடங்கை அனுபவமாகக் கொண்டவர்கள். இவ்வாறான பெரியோர்கள் தற்கால சமூகத்தில் பல்வேறு வகையிலும் துன்பத்தை அடைந்து வருகின்றார்கள். முதுமையை பெரும்பாலானவர்கள் விரும்புவது கிடையாது. ஆனால் இது வாழ்க்கையின் ஒரு அங்கம். இயற்கையான அதனை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். குடும்பத்தின் வளர்ச்சிக்காக தமது ஆயுளை செலவிடுபவர்கள் இவ் முதியோர்கள் ஆவர். ஆனால் நாம் யாரும் அதைப்பற்றி ஒன்றும் எண்ணுவது கிடையாது,

அந்தவகையில் இக்காலகட்டத்தில் சமூகத்தில் வயதுபோன முதிர்ச்சியடைந்தவர் அதாவது முதியோர் என்று கூறி புறம்தள்ளி வருகின்றனர். நாம் ஏன் அவர்களை முதியோர் என்று அழைக்கவேண்டும்? ஏன் நம்மைவிட மூத்தவர்கள் என்று அழைக்கக்கூடாதா? அதாவது முதியோர் என்ற வார்த்தைக்குப் பதிலாக மூத்தவர் என்று அழைக்கலாம். நாம் இவர்கள் முதிர்ச்சியடைந்தவர்கள் என்று நாம் அவர்கள் கூறும் அறிவுரைகளை நாம் பொருட்படுத்தாமல் அவர்களை உதாசீனம் செய்கிறோம். தற்கால சமூகத்திலுள்ள சிறுவர்களுக்கு இவர்களது அறிவுரைகள் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளும் விலைமதிக்கமுடியாதவை ஆகும்.

நம்மை பத்து மாதம் சுமந்து பெற்று நாங்கள் பிறப்பதற்கு முன்னே நம் குணம், குறி எவ்வாறு இருக்கும் என்பதை அறியும் முன்பே நம்மை நேசிப்பவர்கள் நம் பெற்றோர்கள். நாம் எவ்வளவுதான் தவறுகள் செய்தாலும் அதைப் பொறுத்துக்கொண்டு நமக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தை தருபவர்களும் அவர்களேயாவர்.

இவ்வாறான நம் தாய் தந்தை முதியவர்களானதும் இல்லத்தில் சேர்த்துவிடுகின்றோம. இவ்வாறு நாம் அவர்களை ஒரு முதியோர் இல்லத்தில் சேர்க்கும் போது அவர்களது மனம் என்ன பாடுபடும் என்பதனை ஒருபோதும் எண்ணுவதில்லை. எனவே இவ்வாறான செயல்களை செய்யும்போது நமக்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்ற வேண்டும் நாமும் ஒரு காலத்தில் முதியோர் என்ற நிலையை அடைவோம் என்பதாகும்.

அந்தவகையில் நாம் பெரியவர்களைக் கொண்டாடும் ஒரு நாள் ஒக்டோபர் 1ம் திகதி முதியோர் தினமாகக் கொண்டாடப்படுகின்ற அதே நாளில்தான் சிறுவர் தினமும் கொண்டாடப்படுகின்றது. இவ்விரு தினங்களும் ஒன்றாக கொண்டாடப்படுவதற்கு காரணம் வயதுசென்றதும் முதியவர்களும் சிறுவர்கள் தான். அவர்களை ஒரு சிறுவரைப் போல பேணவேண்டும் என்பதற்காகவாகும். நமது மூத்தோரைக் கொண்டாட நமக்கு ஒருநாள் மட்டும் போதாது. அவர்கள் ஒவ்வொரு நாளும் கொண்டாடப்படவேண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவற்றைவிட இக்காலத்திலுங்கூட பிறர்கையை எதிர்பாராது தமது சொந்தக்காலில் நின்று தமது வாழ்க்கையை வாழ்ந்துவரும் மூத்தவர்கள் பலரும் உள்ளனர். பொதுவாக இவ் முதியவர்களிடம் ஒரு விடயத்தை நாம் அவதானிக்கலாம். அதாவது இவர்கள் எப்போது பார்த்தாலும் ஏதாவதொரு வேலையைச் செய்துகொண்டேயிருப்பர். தற்கால சமூக வலைத்தளங்களுக்கிடையில் முடங்கிக்கிடக்கும் சோம்பேறித்தனமானவர்களுக்கு நம் மூத்தவர்கள் இப்போதுங்கூட ஒரு முன் உதாரணமாகத்தான் திகழ்கின்றனர். இப்படிப்பட்ட நம் பெற்றோர்கள், பெரியோர்கள் எதிர்பார்ப்பது அவர்களது கடைசிக்காலத்திலும் அவர்கள் தம் குழந்தைகளுடன் தம் காலத்ததைக் கழித்துவிட வேண்டும் என்பதாகும். ஆகவே நாம் அவர்களை சுமையாக எண்ணி ஏதாவது முதியோர் இல்லத்திலோ அனாதைகள் மடத்திலோ சேர்த்துவிடுகின்றோம் என்பதுதான் தற்கால நிலை.

புரண்டுபடுத்தால் நாம் இறந்துவிடுவோமோ என்று கருவில்கூட நமக்காக தம் தூக்கத்தை தொலைத்து இரவில் விழித்திருந்த சூரியன் நமது அம்மா. தனது இரத்தத்தை வியர்வையாக்கி நம் எதிர்காலத்தை வெளிச்சமாக்கிய இன்னொரு தியாகி எமது அப்பா. இவ்வாறு எமது எதிர்காலத்தின் வெளிச்சத்திற்காக தமது எதிர்காலத்தை தியாகம் செய்த நமது பெற்றோர்கள் முதியவர் ஆனதும் அவர்களை ஒரு வேலைக்காரர் போல நடத்துகின்றோம். இவ்வாறு சொல்லிமாளாத கொடுமைகளையும் சில முதியவர்கள் அனுபவித்து வருகின்றனர். இவற்றுடன் நாம் நமது பெற்றோர்களை எவ்வாறு பேணுகின்றோமோ என்பதைப் பொறுத்தே நம் குழந்தைகள், நாம் முதியவர் என்ற நிலைய அடையும்போது நம்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணுவார்கள். என்னதான் இருந்தாலும் எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்யலாம்.

இப்பொழுதும் வீதி ஓரங்களிலும், கோவில் வாசல்களிலும், ஒருவேளை உணவிற்காக பிறரிடம் கையேந்தி யாசகம் செய்யும் வயது முதிர்ந்தவர்களைப் பார்க்கும்போது எனது மனம் தீயாக கொழுந்துவிட்டு எரிகின்றது. அவர்கள் பெற்ற பிள்ளைகள் ஏன் ஒரு நொடிகூட இவர்களை நினைத்து யோசிப்பதில்லை. இவர்கள் எம்மைப் பெற்றவர்கள், நம் வாழ்க்கை முழுவதும் கடவுளின் மறு அவதாரம் போல் காட்சியளிப்பவர்கள், நம் மூத்தவர்கள் என்பதை அறியாத நாம் அவர்களை பேணுவதை விட்டுவிட்டு கோயிலுக்கு செல்கின்றோம். கடவுளை தரிசிப்பதற்கு முன்னர் நம் வீட்டில் உள்ள தெய்வத்தை தரிசிக்க வேண்டும். அதன் பின்னர்தான் ஆலயத்திற்கு சென்று கடவுளை தரிசிப்பது சிறப்பைத்தரும்.

நம் சமூகத்தில் பலவாறாக மன அழுத்தங்களுக்கு உட்பட்டிருக்கும் நம் முதியவர்கள் நம் வாழ்வில் பெரிய ஆலமரம் போல திகழ்கின்றார்கள். நாம் அவற்றின் விழுதுகளாகவே இருக்கின்றோம். ஆனால் தற்காலத்தில் இவ்வாறான பெரியவர்களை யாரும் மதிப்பதில்லை. அதாவது மூத்தவர்களிற்கு எதிரில் காலிற்கு மேல் கால்போட்டு உட்காருதல், பெரியவர்கள் நிற்கத்தக்கையில் தாம் உட்காருதல், பெரியோரின் பேச்சை செவிசாய்க்காமல் இருத்தல் இவ்வாறான செயல்களால் தற்காலத்தில் பெரியவர்கள் தமது மதிப்பை இழக்கின்றனர்.

இக்காலத்தில் நாம் நமது குழந்தைகளுக்கு சிறுபராயத்திலிருந்தே இவ்வாறான பெருமைமிக்க முதியவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி சொல்லிக்கொடுக்க வேண்டும். என்னதான் இருந்தாலும் நம் வாழ்வை வளப்படுத்திய எம்மை வழிப்படுத்திய நம் பெற்றோர்கள் இவ்வுலகில் உள்ளபோதே அவர்களின் மனதை மகிழ்விக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இறந்த பின்பு நாம் அவர்களைத் தேடிச்சென்று அவர்களுக்காகச் சிந்தும் கண்ணீரில் கூட உண்மையான அன்பு இருக்காது.

எனவே '**அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியோரைப் பேணி தமராக் கொளல்**' என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க நாம் நாம் நமது மூத்தோர்களை பேணி அவர்களை நம்மவர்களாகக்கொள்ளவேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் சில சேவைகளும் அவற்றிற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும்

தொகுப்பு :
திருமதி. ஸ்ரீஸ்கந்தராஜா றபேக்கா, திருமதி. றபியுதீன் பாத்திமா பஸ்னா
(வருமான வரிப்பரிசோதகர்)
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## 01. சோலை வரி பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் தொடர்பிலான நடைமுறை

### சட்ட ஏற்பாடுகள்

➢ 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 (2) மற்றும் 126 (ஏ) பிரிவுகள்

### சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைப்புக்கள்

I. விண்ணப்பதாரியின் கடிதம்
II. பிரதேசசபையால் வழங்கப்பட்ட நடப்பு ஆண்டில் சொத்துக்களுக்குரிய விலைமதிப்பு அறிவித்தல் (K.படிவம்)
III. ஆதனத்தின் உரிமை தொடர்பான மூலப் பிரதி மற்றும் நிழற் பிரதி
IV. காணியின் நில அளவைப்படம்
V. வரலாற்றுத் தாள்
VI. கட்டிட அனுமதியின் பிரதி

### நடவடிக்கை செயல்முறை

01. சபையினால் நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் வருடாந்தம் விதிக்கப்படும் கட்டணங்களை அறவிட்டு சோலை வரி பதிவேட்டில் பெயர் மாற்றம் தொடர்பிலான விண்ணப்பத்தை மற்றும் அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குதல்.
02. உரிய முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பத்தை சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்புநோக்கிப் பார்த்து பின்வரும் இணைப்புக்களுடன் அதனைப் பெற்றுக்கொள்ளல். பூரணமற்ற விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்துவதற்கு அலுவலகத்தினால் உதவுதல்.
03. விண்ணப்பத்தில் தகவல்கள் சரியாக இருப்பின் பதிவுசெய்தல்
04. ஏற்றுக்கொண்ட விண்ணப்பத்தை செயலாளரிடம் சமர்ப்பித்தல்
05. வருமானப் பரிசோதகரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வருமானப் பரிசோதகரின் அறிக்கையை செயலாளரிடம் சமர்ப்பித்தல்

07. சொத்துக்குரிய நிலுவை வருமானங்கள் ஏதும் இருப்பின் அதனை அறவிடுதல்

08. ஏற்புடைய தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டு சோலை வரி பதிவேட்டில் பெயரை மாற்றுதல்

## 02. கட்டட திட்ட வரைபட விண்ணப்பங்களை அனுமதித்தல் தொடர்பான நடைமுறை

**சட்ட ஏற்பாடுகள்**

- வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (268ம் அதிகாரம்)
- 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 47,48 மற்றும் 49ம் பிரிவுகள்

**சமர்ப்பிக்க வேண்டிய இணைப்புக்கள்**

1) பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம்
2) அமைக்கப்படவுள்ள கட்டட வரைபடம்
3) கட்டடம் அமைக்கப்படவுள்ள காணியின் உறுதி / அனுமதிப் பத்திரம் - போட்டோ பிரதிஇ மூலப்பிரதி (மூலப்பிரதி திருப்பி ஒப்படைக்கப்படும்).
4) நில அளவைப்படத்தின் மூலப் பிரதிஇ போட்டோ பிரதி (மூலப்பிரதி திருப்பி ஒப்படைக்கப்படும்).
5) காணி விற்பனை உடன்படிக்கை மூலம் பெறப்பட்டிருப்பின் உடன்படிக்கை காணி உரிமையாளரால் நேரடியாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். (விற்பனை உடன்படிக்கைஇ தாய் உறுதி ஆகியவற்றின் போட்டோ பிரதிஇ மூலப்பிரதி)
6) கட்டடம் அமைக்கப்படவுள்ள ஆதனத்திற்கு இறுதியாக செலுத்திய ஆதனவரி பற்றுச்சிட்டு. (ஆதன வரி அறவீட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு மட்டும்)
7) தேவையான சந்தர்ப்பங்களில் அரசாங்க அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களின் சிபாரிசுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட கடிதங்களின் பிரதிகள்

**நடவடிக்கை செயல் முறை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. சபையினால் முடிவுசெய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ள கட்டணங்களை அறவிட்டு கட்டட திட்ட வரைபடங்கள் அனுமதிக்கும் விண்ணப்பத்தையும் அறிவுறுத்தல் பத்திரத்தையும் வழங்குதல்

02. உரிய முறையில் பூரணப்படுத்திய விண்ணப்பத்தை சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்புநோக்கி உரிய இணைப்புக்களுடன் பெற்றுக்கொள்ளல்./பூரணமற்ற விண்ணப்பத்தை உரிய முறையில் நிரப்புவதற்கு அலுவலகத்தினால் உதவுதல்.

03. விண்ணப்பத்தில் தகவல்கள் சரியாக இருப்பின் ஆவணமயப்படுத்தல்.

04. ஏற்றுக்கொண்ட விண்ணப்பத்தை தவிசாளர் / செயலாளரிடம் சமர்ப்பித்தல்.

05. கட்டடத்தின் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டு அறவிட வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் வருமானப்பரிசோதகர் அறிக்கையை தவிசாளர் / செயலாளரிடம் சமர்ப்பித்தல்.

06. கட்டடத்தின் பரப்பளவை அடிப்படையாகக் கொண்டு ஏற்புடைய கட்டணங்களை அறவிடுதல்.

07. வருமானப்பரிசோதகரின் களப் பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனை சுகாதார மருத்துவ அதிகாரியிடம் அனுப்புதல்.

08. பிராந்திய சுகாதார சேவை அதிகாரியின் பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல்.

09. தேவையான போது ஏனைய நிறுவனங்களின் சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்ளல்.

10. பெறப்பட்ட அறிக்கைகள் மற்றும் சிபாரிசுகளை செயலாளர் ஊடாக தவிசாளருக்கு சமர்ப்பித்தல்.

11. தவிசாளர் அனுமதித்தல்.

12. அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டட திட்ட வரைப்படத்தின் பிரதியொன்றை விண்ணப்பதாரிக்கு வழங்குதல்.

**குறிப்பு :** கட்டிட அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடமாகும். கால நீடிப்புச் செய்ய விரும்பின் எழுத்துமூலம் விண்ணப்பித்து பிரதேச சபையிலிருந்து அனுமதி பெறவேண்டும். அனுமதி பெறுகின்ற போது கட்டணங்களை செலுத்துதல் அவசியமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கான நடைமுறை

சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பின்வரும் இரண்டு அடிப்படைகளில் வழங்கப்படும்

I. புதிய அனுமதிப்பத்திரம்

II. தற்போதுள்ள அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல்

### சட்ட ஏற்பாடுகள்

- 1987ம் ஆண்டின் 15 இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 106ம் பிரிவு
- 1980 ஆம் ஆண்டின் 47ம் இலக்க மத்தியசுற்றாடல் அதிகாரசபை சட்டம் மற்றும் திருத்தங்கள்
- 2008 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

### சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைப்புக்கள்

- ஏற்புடைய காணியின் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம் (உறுதி / அனுமதிப்பத்திரம்/ குத்தகை ஒப்பந்தம்)
- விண்ணப்பதாரி ஏற்புடைய காணியின் உரிமையாளராக இல்லாதபோது கைத்தொழிலை கொண்டு நடாத்துவதற்கு உரிமையாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஒப்பந்த ஆவணம்.
- மேற்படி காணிக்குரிய நில அளவை வரைபடம்
- ஏற்புடைய பணிக்காக பிரதேசசபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் நிழற் பிரதி

### செயல் நடவடிக்கை முறை

01. பிரதேச சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டிய கைத்தொழில் அல்லது இடம் அதிகார எல்லைக்குள் எந்தஅளவில் காணப்படுகின்றது என்பது பற்றிய ஆய்வொன்றினை உரிய பதிவேடுகளின் பிரகாரம் மேற்கொள்ளல்.

02. ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளும் விபரங்களை செயலாளருக்கு சமர்ப்பித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அல்லது புதுப்பிக்கவேண்டிய கைத்தொழில் உரிமையாளர்களுக்கு உரிய காலத்தினுள் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு எழுத்துமூலம் அறிவித்தல்.

04. அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வரும் கைத்தொழில் உரிமையாளர்களுக்கு விண்ணப்பப்படிவக் கட்டணங்களை அறவிட்டு விண்ணப்பத்தையும் அறிவுறுத்தல் பத்திரத்தையும் வழங்குதல்

05. பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தையும் அதனுடன் சமர்ப்பிக்கும் இணைப்புக்களை பொறுப்பேற்று சரிபார்ப்புபட்டியலுக்கு (Check List) அமையபரீட்சித்து உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளல்

06. மேற்படி 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் உண்மையானவை எனின், முதலீட்டின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு உரிய பரிசோதனைக் கட்டணத்தை அறவிடுதல்

07. அனுமதிப்பத்திரம் புதிய கைத்தொழில் ஒன்றுக்காக வழங்கப்படுமிடத்து புதிய கோவையொன்றைதிறத்தல்.

08. அனுமதிப்பத்திரம் கோரப்படும் கைத்தொழில் பற்றியகள ஆய்வை மேற்கொள்ளுமாறு ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கு அறிவித்தல்

09. கள ஆய்வு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல்

10. களஆய்வு அறிக்கையை சுற்றாடல் தொழில்நுட்பமதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்தல்

11. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுகளை கௌரவ தவிசாளரிடம் அனுமதிக்காக சமர்ப்பித்தல்

12. கௌரவ தவிசாளரினால் அனுமதிக்கப்படாத விண்ணப்பங்கள் இருப்பின் ஏற்புடைய விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என்பதை காரணங்களுடன் உரியகாலத்திற்குள் எழுத்து மூலம் அறிவித்தல்

13. கௌரவ தவிசாளரினால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களுக்கு உரிய அனுமதிப்பத்திரக் கட்டணங்களை செலுத்துமாறு விண்ணப்பதாரிக்கு அறிவித்தல்

14. உரிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிட்டு பிரதிகளுடன் அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்

15. பிரதிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்திற்கு ஏற்புடைய விபரங்களை உள்ளடக்கி சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர பதிவேட்டை இற்றைப்படுத்தல்
17. அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவேண்டியிருப்பினும் உரியகாலத்திற்குள் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்காத கைத்தொழில் உரிமையாளர்களுக்கு சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவித்து அறிவித்தல் பத்திரங்களை அனுப்புதல்
18. அறிவித்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரியகாலத்திற்குள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத கைத்தொழில் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தல்
19. நீதிமன்றக் கட்டளைப் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குள் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாத கைத்தொழில்கள் தொடர்பில் முடிவுறுத்தும் கட்டளையொன்றை நீதிமன்றத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு சுற்றாடல் உத்தியோகத்தருக்கு அதிகாரம் வழங்குதல்
20. முடிவுறுத்தல் கட்டளையை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் பின்னூட்டம் செய்தல்

## 04. சட்ட விரோத கட்டட நிர்மாணிப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் நடைமுறை

**சட்ட ஏற்பாடுகள்**

- வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் (268 ஆம் அதிகாரம்)
- 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் இல 47,48 மற்றும் 49 பிரிவுகள்

**செயல் நடவடிக்கை முறை**

01. சட்ட விரோத நிர்மாணிப்புக்கள் தொடர்பில் அறியக்கிடைத்தல் (தொலைபேசி மூலம், கடிதங்கள் மூலம், முறைப்பாடுகள் மூலம் மற்றும் கள ஆய்வின் மூலம்)
02. சட்ட விரோத நிர்மாணிப்புக்கள் தொடர்பில் அறியக் கிடைத்தல் பற்றிய தகவல்கள் பதிந்து எண் ஒன்றை வழங்குதல்.
03. தவிசாளர் / செயலாளரிடம் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வருமான பரிசோதகர் மூலம் களப் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

05. அந்த அறிக்கையில் திகதி முத்திரை பதித்தல்

06. அந்த அறிக்கையை சட்ட விரோத நிர்மாணிப்புக்கள் பற்றிய பதிவேட்டில் உள்ளடக்குதல்

07. அறிக்கையை தவிசாளர்/ செயலாளருக்கு சமர்ப்பித்து பணிப்புரையைப் பெற்றுக்கொள்ளல்

08. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 12(1) பிரிவுக்கு அமைய அறிவித்தல் ஒன்றை வழங்குதல் (தவிசாளரினால் ஒப்பமிடுதல் வேண்டும்)

I. மேற்படி 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய நிர்மாணிப்பை செய்யும் ஆள் அல்லது அவரது பிரதிநிதியினால் அனுமதிக்கப்பட்ட திட்ட வரைப்படத்தை சமர்ப்பித்தல்

(அ) திட்ட வரைபடம் அனுமதிக்கப்பட்ட காலப் பிரிவு கழிந்துள்ளதா என்பதை பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் செல்லுபடியாகும் காலம் கடந்திருப்பின் காலத்தை நீடிப்பதற்கு அறிவுரை வழங்குதல்.

(ஆ) அனுமதிக்கப்பட்ட திட்ட வரைப்படத்திற்கு அமைய நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை பரீட்சித்துப் பார்த்தல்.

(இ) அனுமதிக்கப்பட்ட திட்ட வரைப்படத்திற்கு அமைய நிர்மாணிப்பு நடைபெறவில்லை எனின், நிர்மாணிப் பணிகளை நிறுத்துமாறு அறிவித்தல் மற்றும் திருத்தப்பட்ட திட்ட வரைபடமொன்றை 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு அறிவித்தல்

II. மேற்படி 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய நிர்மாணிப்பை செய்யும் ஆள் அல்லது அவரது பிரதிநிதியினால் அனுமதிக்கப்பட்ட திட்ட வரைப்படத்தை சமர்ப்பிக்காத விடத்து,

(அ) தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு அறிவித்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) கட்டட விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து திட்ட வரைப்படத்தை 14 நாட்களுக்குள் அனுமதித்துக் கொள்ளுமாறு அறிவித்தல்

III. மேற்படி 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய நிர்மாணிப்பை செய்யும் ஆள் அல்லது அவரது பிரதிநிதி முன்வராத விடத்து அல்லது உரிய காலப்பகுதிக்குள் கட்டிட விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து திட்ட வரைபடத்தை அனுமதித்துக்கொள்ளாத விடத்து,

(அ) தற்போது செய்து வரும் நிர்மாணிப்பை அல்லது நிறைவு செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்பை உடைத்து அகற்றுமாறு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 12(2) ஆம் பிரிவின் பிரகாரம் கட்டளையொன்றை பதிவுத் தபாலில் அனுப்புதல்.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பிரிவுக்குள் உடைத்து அகற்றாத விடத்து உடைத்து அகற்றுவதற்கு நீதிமன்றக் கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்ளல்

09. நீதிமன்றக் கட்டளைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல்

## 05. வியாபார அனுமதிப்பத்திரமொன்றை வழங்குதல் தொடர்பில் எடுக்கும் நடைமுறை

**சட்ட ஏற்பாடுகள்**

- 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 முதல் 149 வரையிலான பிரிவுகள்
- சபையினால் இயற்றப்பட்டுள்ள அபாயகரமான மற்றும் ஆபத்தான வியாபார நிலையங்கள் பற்றிய துணை விதிகள்

**சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைப்புக்கள்**

- வியாபாரநிலையம் அமைந்துள்ள காணி தொடர்பான ஆவணங்கள்
- ஆதனத்தின் நில அளவை வரைபடம்
- வியாபாரநிலைய கட்டிடத்தினை அமைப்பதற்கு பிரதேசசபையில் பெறப்பட்ட கட்டட அனுமதி கடிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கட்டிடம் அமைத்த பின்னர் பிரதேசசபையில் பெறப்பட்ட குடிபுகுச்சான்றிதழ்
- வருடாந்த வியாபார உரிமக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு
- பிரதேச சபையால் பெறப்பட்ட சூழல் சுற்றாடல் உரிமம்
- ஆதனவரி செலுத்திய பற்றுச்சீட்டு (ஆதன வரி பிரதேசங்களுக்கு மட்டும்)
- வாடகை கட்டிடமெனில் கட்டிட உரிமையாளரோடு மேற்கோள்ளப்பட்ட வாடகை உடன்படிக்கையின் பிரதி

**செயல் நடவடிக்கை முறை**

01. எதிர்வரும் வருடத்திற்காக நடப்பு ஆண்டின் ஒக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம் தொடர்பில் ஆய்வு செய்து இடத்தை வருமானப் பரிசோதகர் அடையாளம் காணல்
02. ஆய்வின் போது பெற்றுக்கொள்ளப்படும் விபரங்களுக்கு அமைய அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய கைத்தொழில் பற்றிய ஆவணத்தை விடய உத்தியோகத்தரால் தயாரித்தல்
03. நடப்பு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் எதிர்வரும் ஆண்டின் அனுமதிப்பத்திர கட்டணங்களை விதித்து முடித்தல்
04. ஒவ்வொரு துணை விதிகளின் கீழும் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்திற்கு அறவிடப்படும் கட்டணங்களை விதிப்பதற்கு சபை பிரேரணையை வரைவு செய்து முறையாக சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு மும் மொழியிலும் வர்த்தமானியில் பிரசுரித்தல்
05. வர்த்தமானி அறிவித்தலை ஏற்புடைய ஆளணியினருக்கு வழங்குதல்
06. துணை விதிகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்களின் உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்
07. பொதுமக்கள் சுகாதார பரிசோதகர் மற்றும் வருமானப் பரிசோதகரால் களப் பரிசோதனை மேற்கொள்ளல்
08. விண்ணப்பத்தை சிபாரிசுக்காக சுகாதார வைத்திய அதிகாரியிடம் சமர்ப்பித்தல்
09. சிபாரிசு செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுமதிக்காக தவிசாளரிடம் சமர்ப்பித்தல்
10. தவிசாளரினால் அனுமதித்தல்
11. தவிசாளரினால் அனுமதிக்கப்பட்ட வியாபார நிறுவனத்தின் மூலம் உரிய அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவிட்டு பற்றுச்சீட்டை வழங்குதல் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிப்பத்திரத்தை தயாரித்து கௌரவ தவிசாளரின் ஒப்பத்திற்காக சமர்ப்பித்தல்

12. வியாபார அனுமதிப்பத்திரத்தை விண்ணப்பதாரிக்கு வழங்குதல்
13. வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் தகவல்கள் வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டில் (நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம்) பதிதல்
14. வியாபார அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு தகைமைப் பெறாத விண்ணப்பதாரிக்கு காரணங்களை குறிப்பிட்டு அறிவித்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மீண்டும் விண்ணப்பிக்குமாறு காலவரையறை குறிப்பிட்டு அறிவித்தல்
15. வியாபார அனுமதிப்பத்திரத்தின் கணிப்பாய்வுப் பதிவேட்டுடன் ஒப்புநோக்கல்
16. அந்த அறிக்கையை செயலாளரிடம் சமர்ப்பித்தல்
17. செயலாளரினால் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் வர்த்தக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாத வியாபாரத் தளங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நடப்பு ஆண்டின் ஜுன் 30 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்காக வருமானப் பரிசோதகருக்கு அதிகாரம் வழங்குதல்
18. நீதிமன்றத்தினால் பணிக்கப்படும் கட்டளைப் பிரகாரம் ஏற்புடைய வியாபாரத்தளங்களின் உரிமையாளர்களுக்கு உரிய திகதிக்கு முன்னர் அனுமதிப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்தல்
19. மேற்படி அறிவித்தலின் பிரகாரம் உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத வியாபார நிலைய உரிமையாளர்கள் பற்றிய பதிவேட்டை செயலாளரிடம் சமர்ப்பித்தல்
20. மேற்படி பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்தரப்பாளர்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆரம்பித்து முடிவுறுத்தல் கட்டளையைப் பெற்றுக்கொள்ள வருமானப் பரிசோதகருக்கு அதிகாரம் வழங்குதல்
21. முடிவுறுத்தல் கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்ளல்
22. அனுமதிப்பத்திரத்தை வழங்கிய பின்னர் அது தொடர்பான தகவல்களை சுற்றாடல் அதிகாரிக்கு வழங்குதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு** : சபையினால் இந்தப் பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு காலச் சட்டகம் (Time frame) ஒன்றை தயாரித்துக்கொள்ள முடியும்

## 06. வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ் மற்றும் கையகப்படுத்தாமை பற்றிய சான்றிதழ் வழங்கும் நடைமுறை

**சட்ட ஏற்பாடுகள்**

- 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் இல 126 (viii)ஏ மற்றும் 158 ஆவது பிரிவு
- உள்ளூராட்சி நிறுவனத்தினால் இயற்றப்பட்டு நிறைவேற்றப்பட்ட கட்டடங்கள் தொடர்பான துணை விதிகள்

**சமர்ப்பிக்கப்படவேண்டிய இணைப்புக்கள்**

- ஆதனத்திற்குரிய உறுதியின் மூலப் பிரதி மற்றும் அதன் நிழற் பிரதி (மூலப் பிரதி மீள வழங்கப்படும்)
- ஆதனத்திற்குரிய நில அளவைப் படத்தின் மூலப் பிரதி மற்றும் அதன் நிழற் பிரதி (மூலப் பிரதி மீள வழங்கப்படும்)

**குறிப்பு** : ஏற்புடைய ஆதனத்தை முறியொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிதி நிறுவனமொன்றில் தடுத்து வைத்திருப்பின் அந்த நிறுவனத்தின் முகாமையாளரினால் உறுதிப்படுத்திய உறுதியின் மற்றும் நில அளவைப் படத்தின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

- துண்டு பிரிக்கப்பட்ட காணி எனின், துண்டு பிரிப்புக்கு ஏற்புடைய அனுமதிக்கப்பட்ட வரைபடத்தின் பிரதி
- ஆதனம் விண்ணப்பதாரிக்கு சொந்தமானதாக இல்லாதவிடத்து உரிமையாளரினால் விரும்பம் தெரிவிக்கப்பட்ட கடிதம் (அந்தக் கடிதத்தின் கையொப்பம் சமாதான நீதிவான் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயல் நடவடிக்கை முறை**

01. வீதி எல்லைக்கோட்டு சான்றிதழ் மற்றும் கையகப்படுத்தாமை சான்றிதழ் வழங்குவதற்காக விண்ணப்பதாரிக்கு உரிய விண்ணப்பத்தை மற்றும் அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குதல்.

02. பூரணப்படுத்திய விண்ணப்பத்தையும் உரிய இணைப்புக்களையும் விண்ணப்பதாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளல்

03. சரிபார்ப்பு பட்டியலுக்கு அமைய (Check list) விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்களையும் அந்த தகவல்களின் உண்மைத் தன்மையையும் உறுதிப்படுத்திக்கொள்ளல்

04. மேற்படி ஆவணங்கள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திகதி முத்திரையைப் பதித்தல்

05. பணிப்புரை பெற்றுக்கொள்ள விண்ணப்பத்தை தவிசாளர்/ செயலாளருக்கு சமர்ப்பித்தல்

06. வீதி எல்லைகோட்டு சான்றிதழ் மற்றும் கையகப்படுத்தாமை சான்றிதழ் வழங்கும் பதிவேட்டில் பதிதல்.

07. தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மற்றும் வருமானப் பரிசோதகரின் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல்

08. விண்ணப்பப்படிவத்தை தவிசாளர்/ செயலாளருக்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்

09. சான்றிதழை வழங்குவதற்கு தகுதி பெறாத போது அதற்கான காரணங்களுடன் விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலம் அறிவித்தல்

10. சான்றிதழை வழங்குவதற்கு தகுதிபெறுமிடத்து அதற்கான கட்டணத்தை அறவிடுதல்

11. சான்றிதழை எழுதி பதிவேட்டுடன் ஒப்பத்திற்காக தவிசாளர்/ செயலாளருக்கு சமர்ப்பித்தல்

12. சான்றிதழின் மூலப் பிரதியை வழங்கி பிரதியை கோவையிடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களில் வருமான சேகரிப்பில் எதிர்நோக்கும் சவால்கள்.

செல்வி. நிஷாந்தி உதயகுமாரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வ.தெ.த.பி.சபை.

உள்ளூராட்சி மன்றம் என்பது சட்ட அதிகாரம் கொண்ட நிறுவனமாகும். ஒரு நாட்டின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் மக்களுக்கு பிரதேச மட்டத்தில் பயனுள்ளவாறு கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே அரச கொள்கைக்கிணங்க உள்ளூராட்சி மன்றங்களைத் தாபிப்பதற்கான நோக்கமாகும்

அதிகார பிரதேசத்தில் சமூக, பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மிகவும் திருப்திகரமாக தொகுத்து முகாமைத்துவம் செய்வதற்காக உள்ளூராட்சி மன்றத்திற்கு போதியளவு நிதிப்பலம் இருக்கவேண்டும். காரணம் மேற்படி கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபை நிதியத்தின் மீது தங்கி இராது உள்ளூராட்சி மன்றத்திற்கு தேவையான நிதியை திரட்டும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றத்திற்கே உரியதாகும்.

தமது அதிகாரப்பிரதேசத்தில் பொதுவழிகள், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவை ஆகியவற்றை கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் என்பவற்றின் ஊடாக குறித்த பணிகளைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும் மூலம் மக்களின் நல்வாழ்வு, சௌகரியம், நலனோம்பல் என்பவற்றை ஏற்படுத்தலும் சேகரிக்க வேண்டிய சகல வருமானங்களையும் உரிய நேரத்திற்கு அறவிடுதலும் உள்ளூராட்சி மன்றங்களின் பணியாகும்.

இவற்றைவிட உள்ளூராட்சி மன்றங்களில் சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு புதிய வருமான வழிகளை கண்டறிய முனைப்பாக செயற்படுதல், சோலைவரியின் பொருட்டு சொத்துக்களின் மதிப்பீடுகளை நாளதுவரைப்படுத்துதல், வருமானம் சேகரிப்புக்கு ஏற்புடைய செயற்பாடுகளை திட்டமிட்டு அவற்றை தொடர்ச்சியாக கண்காணித்து மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் போன்றனவும் இவற்றின் செயற்பாடுகளாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களில் வருமான சேகரிப்பில் எதிர்நோக்கும் சவால்கள்.

செல்வி. நிஷாந்தி உதயகுமாரன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர்
வ.தெ.த.பி.சபை.

உள்ளூராட்சி மன்றம் என்பது சட்ட அதிகாரம் கொண்ட நிறுவனமாகும். ஒரு நாட்டின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாட்டில் மக்களுக்கு பிரதேச மட்டத்தில் பயனுள்ளவாறு கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதே அரச கொள்கைக்கிணங்க உள்ளூராட்சி மன்றங்களைத் தாபிப்பதற்கான நோக்கமாகும்

அதிகார பிரதேசத்தில் சமூக, பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை மிகவும் திருப்திகரமாக தொகுத்து முகாமைத்துவம் செய்வதற்காக உள்ளூராட்சி மன்றத்திற்கு போதியளவு நிதிப்பலம் இருக்கவேண்டும். காரணம் மேற்படி கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றிக்கொள்வதற்காக மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபை நிதியத்தின் மீது தங்கி இராது உள்ளூராட்சி மன்றத்திற்கு தேவையான நிதியை திரட்டும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றத்திற்கே உரியதாகும்.

தமது அதிகாரப்பிரதேசத்தில் பொதுவழிகள், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச் சேவை ஆகியவற்றை கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல் என்பவற்றின் ஊடாக குறித்த பணிகளைப் பாதுகாத்தலும் ஊக்குவித்தலும் மூலம் மக்களின் நல்வாழ்வு, சௌகரியம், நலனோம்பல் என்பவற்றை ஏற்படுத்தலும் சேகரிக்க வேண்டிய சகல வருமானங்களையும் உரிய நேரத்திற்கு அறவிடுதலும் உள்ளூராட்சி மன்றங்களின் பணியாகும்.

இவற்றைவிட உள்ளூராட்சி மன்றங்களில் சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு புதிய வருமான வழிகளை கண்டறிய முனைப்பாக செயற்படுதல், சோலைவரியின் பொருட்டு சொத்துக்களின் மதிப்பீடுகளை நாளதுவரைப்படுத்துதல், வருமானம் சேகரிப்புக்கு ஏற்புடைய செயற்பாடுகளை திட்டமிட்டு அவற்றை தொடர்ச்சியாக கண்காணித்து மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் போன்றனவும் இவற்றின் செயற்பாடுகளாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் பற்றியும் அப்பிரச்சினைகளைத் தகர்த்து வருமானத்தை எவ்வாறு அதிகரித்துக்கொள்ளலாம் என்பது பற்றியும் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இலங்கையில் வரலாற்றுக்காலம் முதல் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்கிவருகின்றன. எனினும் தற்போது மாநகரசபை, நகரசபை மற்றும் பிரதேசசபை எனும் மூன்று வகையான அதிகார சபைகள் காணப்படுகின்றன. இவை தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை பொதுவான ஆட்சி நடைமுறைகள் ஊடாக அமுல்படுத்தலாம். அந்தவகையில் சொத்துக்களை பாரதீனப்படுத்துதல், ஒப்பந்தங்களைச் செய்தல், வரிகளை அறவிடல், செலவுகளை கணிப்பிடல், உபவிதிகளை உருவாக்கல் என்பன உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுளள்ள அதிகாரங்களில் சிலவாகும்.

அவ்வாறே உள்ளூராட்சி மன்றங்கள் பொது மக்களின் வரிப்பணத்தைக் கொண்டே பராமரிக்கப்படுகின்றன. இதற்கிணங்க மக்களே, உள்ளூராட்சி மன்றங்களின் உரிமையாளர்களாவர். இவர்களுக்கு சேவை வழங்குவதற்காக வருமான சேகரிப்பில் உள்ளூராட்சி மன்றங்கள் ஈடுபடுகின்றபோது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்படுகின்றது,

சில உள்ளூராட்சி மன்றங்களில் நிர்வாக எல்லைபரப்பு குறைவாக உள்ளமை, உள்ளூராட்சி மன்றங்களின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வர்த்தக மற்றும் வதிவிட கட்டிடங்களின் செறிவு குறைவாக இருத்தல், ஆதனவரி மதிப்பீடு செய்யப்படாமல் பல பிரதேசங்கள் காணப்படுதல், அரசியல் ஆதரவாளர்களால் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் நடாத்தப்படுவதால் வியாபார உரிமங்கள் அறவிடுவதில் சிக்கல் காணப்படுதல், அரச மற்றும் அரச சார்ப்பற்ற நிறுவனங்களின் கிடைப்பனவு குறைந்தளவிலும் அதேநேரம் ஒழுங்கின்றியும் கிடைத்தல், வருமான சேகரிப்பிற்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதால் அலுவலக நடைமுறையை சீராக பேணப்படமுடியாமை என்பன வருமான சேகரிப்பிலுள்ள பொதுவான சவால்களாகும். அவற்றினை வெற்றிகொள்வதற்கு பின்வரும் வழிமுறைகளை கையாள்வது பொருத்தமானதாகும்.

உள்ளூராட்சி மன்றம் தமது வருமானத்தை அதிகரிக்க வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் போன்ற நானாவித வருமான மூலங்களை உரியவாறு இணங்கண்டு அதற்கான ஆவணங்களை உரியவாறு பேணிச்செல்லுதல் வேண்டும். வருமானம் விதித்தல், திரட்டுதல், முகாமைத்துவம் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் காலப்பகுதியில் ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படும் அதிகாரங்களை உரிய அலுவலர்களிடம் கையளித்து அவை தொடர்பில் உயர் கண்காணிப்பை மேற்கொள்ளுதல் அவசியமாகும்.

அதைவிட உள்ளுராட்சி மன்றங்களின் வருமான முகாமைத்துவத்தை வினைத்திறனாகக் கொண்டு சென்று தமக்கு கிடைக்க வேண்டிய வரி மற்றும் கட்டணங்களை எதிர்பாரத்தளவு அறவிடுவதற்கும் போதியளவு நிலுவையான பணத்தைத் திரட்டிக்கொள்வதற்கும் பின்வரும் விடயங்களில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அவை:

- சட்டபூர்வமாகச் சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமான அடிப்படைகள் என்ன என்பது பற்றியும் அதற்குரிய சட்ட ஒழுங்குகள் பற்றிய அறிவு மற்றும் விளக்கத்தினை விருத்தி செய்து கொள்ளல்
- விசேடமாக வருமானம் ஒன்று திரட்டல் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு (வருமான பரிசோதகர்) உரிய பணிப் பட்டியல் ஒன்று அல்லது தொழில் விபரத்தினூடாக பணிகளை வழங்குதல்.
- வருமானத் திரட்டல் தொடர்பாக தமது பொறுப்பு மற்றும் கடமைகள் தொடர்பாக அதிகாரிகள் தெளிவான புரிந்துணர்வுடன் மற்றும் அர்ப்பணிப்புடன் செயற்படல்.
- வரிப்பணம் செலுத்த வேண்டிய பொது மக்களிடம் வரிப்பணம் செலுத்தப்பட வேண்டியது பற்றி உரிய அறிவித்தல்களை உரிய விதத்தில் வெளியிடல்.
- சபைக்குக் கிடைக்க வேண்டிய பணத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தாதிருத்தல் மற்றும் முறைகேடுகள் நடைபெறா வண்ணம் பாதுகாத்தல்.
- வருமான ஒன்று திரட்டலை விரைவுபடுத்தல் மற்றும் வினைத்திறனாக செயற்படுத்துவதற்காக நடமாடும் சேவை, விளம்பர அறிவித்தல் மற்றும் வெளி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் மற்றும் வீடு வீடாகச் சென்று களத்தில் வரிப்பணம் ஒன்று திரட்டும் மாற்றுச் செயன்முறைகளை பயன்படுத்தல்
- மாதாந்த வருமானம் திரட்டல் இலக்கினை தீர்மானித்தல் மற்றும் இவ்விலக்கினை அடைவதற்காக உரிய அதிகாரிகளுக்கு பொறுப்புக்களை வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வரவு-செலவுத் திட்டத்தின் வருமானம் (Budgeted Income) மற்றும் மெய் வருமானத் (Actual Income) திரட்டல் தொடர்பாக மாதாந்தம் முன்னேற்றக் கலந்துரையாடலொன்று நடாத்துதல்
- வருமானத் திரட்டலில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்ச்சியான பின்னூட்டல்களை நடாத்துதல்
- வருமானத் திரட்டலுக்குரிய துணைவிதிகளை விதித்தல்
- வருமானப் பதிவேடு உரிய விதத்தில் சமநிலைப்படுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு பேணல்.
- சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தினை திரட்ட வேண்டியதன் தேவை மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் புரிந்துணர்வு கலந்துரையாடல்களை மேற்கொண்டு ஒன்றிணைந்து செயற்படுவதை ஊக்குவித்தல்.
- வருமானம் ஒன்று திரட்டல் மற்றும் அதனுடன் தொடர்பான உள்ளக நிர்வாகத்தை வலுவாகப் பேணிச் செல்லல்
- சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள உரிய கால எல்லைகளுள் உரிய வரிப்பணம் மற்றும் கட்டணங்கள் அறவிடப்படாமை தொடர்பாக நீதிமன்றத்திற்கு விடயங்களை சமர்ப்பித்து தேவையான சட்ட ரீதியான பாதுகாப்பினை பெற்றுக்கொள்ளல் - என்பனவாகும்.

எனவே மேற்கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்குமிடத்து உள்ளூராட்சி மன்றங்களில் பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதான நிர்வாக அதிகாரிகள் உட்பட பணிக்குழுவினர் தம்மிடம் வழங்கப்பட்டுள்ள பொறுப்பு மற்றும் கடமைகளை புரிந்துணர்வுடன் மேற்கொள்வதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை ஒன்று திரட்டுவதில் வினைத்திறத்தினை அதிகரிக்க முடிவதுடன் அவ்வருமானத்தைக் கொண்டு, மக்கள் சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறுகின்றது. அதனூடாக வருமான சேகரிப்பின்போது எதிர்நோக்கப்படும் சவால்கள் இழிவளவாக்கப்பட்டு உள்ளூராட்சிமன்றங்கள் தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் சேவை வழங்கலை மிக வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியும் என்பது யாவரும் அறிந்தவொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டியில் வெற்றி பெற்ற மாணவர் பெயர் விபரங்கள்

| போட்டியின் பெயர் | மாணவர் பெயர் | நிலை | பாடசாலையின் பெயர். |
|---|---|---|---|
| நிறந்தீட்டல் | கவீந்தன் யஷ்மி | 01 | அன்னை தெரேசா முன்பள்ளி, புதிய கற்பகபுரம்,பம்மைமடு, வவுனியா |
| | சிவகுமார் ருஷானி | 02 | சரஸ்வதிமுன்பள்ளி,அகத்தியர் வீதி,தோணிக்கல் |
| | வி.தனுக்ஷன் | 03 | திருமகள் முன்பள்ளி,அண்ணாநகர்,வவுனியா |
| | கிஷானிலாபீர் | 03 | மலரும் அரும்புகள் முன்பள்ளி,சிதம்பரநகர் |
| வாசிப்பு | ரவீந்திரதாசன் ஷாரோன் | 01 | வ.பெரியகோமரசங்குளம், ம.வி |
| | அன்பழகன் பிரணாயி | 02 | புதுக்குளம் கனிஸ்ட வித்தியாலயம் |
| | றோன்கிறேசியஸ் மினுஸ்ரிகா | 03 | நொச்சிமோட்டை க.உ.வி |
| கொன்றை வேந்தன் | கேதீஸ்வரன் தபிசாயினி | 01 | புதுக்குளம் க.ம.வி |
| | ந.மதுசாளினி | 02 | சுந்தரபுரம் சரஸ்வதிவி |
| | துரைராஜ் வசந்திரன் | 03 | கருங்காலிக்குளம் அ.த.கபாடசாலை |
| | செ.தர்சனா | 03 | வ.பெரியகோமரசங்குளம் ம.வி |
| திருக்குறள் | ஜெ.டினிக்ஷா | 01 | வ.பாரதிதாசன் வி |
| | நேசராசாதக்ஷிகா | 02 | வ.கந்தபுரம் .வாணிவித்தியாலயம் |
| | அகிலேஸ்வரன் பவித்ரா | 03 | வ.நொச்சிமோட்டை க.உ.வி |
| | றோன்கிறேசியஸ் பே.னுசா | 03 | வ.நொச்சிமோட்டை க.உ.வி |
| | சரவணஜீவராசாசாகித்தியா | 03 | வ.புதுக்குளம் கனிஸ்டவித்தியாலயம் |
| பொதுஅறிவு தரம் 4 | செல்வராசாசில்வாஒபதியா | 01 | பெரியகோமரசங்குளம் ம.வி |
| | எமில்ராசன் டிபின்சன் | 02 | வ.பெரியகோமரசங்குளம் .ம.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | ச.கிதுர்சன் | 03 | வ.கோதண்டர் நொச்சிக்குளம் அ.தக.பா |
| பொதுஅறிவு தரம் 5 | ச.யதுர்சன் | 01 | பாரதிதாசன் |
| | குலேந்திரன் நிஷிகன் | 02 | வ.கூமாங்குளம் சித்திவிநாயகர் வித்தியாலயம் |
| | முருகதாஸ் மிதுசிகா | 02 | வ.புதுக்குளம் க.வி |
| | விவேகானந்தராசாதருணியா | 02 | வ.புதுக்குளம் க.வி |
| | பு.அகர்ஷன் | 03 | வ.பூவரசுஆரம்பபாடசாலை |
| | ந.ஹயானிகா | 03 | வ.சிவபரம் ஆரம்பப்பாடசாலை |
| கட்டுரை 6-8 | நகுலேஸ்வரன் நதுசா | 01 | வ.புதுக்குளம். மு.வி |
| | சிவகுமார் டிலக்சனா | 02 | வ.கூமாங்குளம் சித்திவிநாயகர் வி |
| | யு.சு.கு.ஸஹ்லா | 03 | வ.மதீனாவித்தியாலயம் |
| | க. புவியரசி | 03 | வ.சுந்தரபுரம் சரஸ்வதிவித்தியாலயம் |
| கட்டுரை 9 -11 | பாலசுப்ரமணியம் அபிநயா | 01 | வ.புதுக்குளம் ம.வி |
| | ஜெ.சிவலக்சி | 02 | வ.பூம்புகார் கண்ணகிவி |
| | த.லாவண்யா | 03 | வ.பன்றிக்கெய்தகுளம் அ.த.க. பாடசாலை |
| கட்டுரை 12 -13 | ரவிந்திரன் மதுர்ஷனா | 01 | வ.பெரியகோமரசங்குளம் ம.வி |
| | ஜெ.விக்னேஸ்வரி | 02 | வ.கோவில்புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம் |
| | சிவராசாபிஜிலா | 03 | வ.கந்தபுரம் வாணிவி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமை பரிசில் பரீட்சையில் பாடசாலைமட்டத்தில் அதிகூடிய புள்ளிபெற்ற மாணவர் பெயர் விபரம்

| இல | மாணவர் பெயர் | புள்ளி | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|
| 01 | பொன்கரன் டேனுஜா | 164 | ஆசிகுளம் அ.த.க. பாடசாலை |
| 02 | இ.கிருஸ் | 164 | இராசேந்திரன்குளம் அ.த.க.பா |
| 03 | நவநீதன் கிஜானிக்கா | 134 | சிவபுரம் அ.த.கபா |
| 04 | குகனேசன் நிசாந்தி | 124 | விளாத்திக்குளம் சிதம்பரம் வி |
| 05 | ரவீந்திரன் ஜனுசிகன் | 106 | மருதோடை அ.த.க.பா |
| 06 | முத்துக்குமார் சினோஜன் | 143 | நவ்வி ஸ்ரீ வாணிவி |
| 07 | சத்தீயராஜ் அபிசாலினி | 110 | செங்கல்படைதிருக்குமரன் வி |
| 08 | ஆ.ஐ .ரிம்சான் | 123 | புளிதரித்த்குளம் அரபாவித்தி |
| 09 | சசிக்குமார்சாருகா | 172 | செக்கட்டிப்புலவுஅ.த.கபா |
| 10 | குணநீதன் வித்யா | 159 | சின்னத்தம்பனை ஸ்ரீ கிருஸ்ணாவி |
| 11 | பாரதராசாபொன்சிகா | 94 | மடுக்குளம் நவஜோதிவி |
| 12 | கிருஸ்ணராஜா சாதுரியா | 156 | மகாறம்பைக்குளம் அ.த.கபா |
| 13 | உதயகுமார் வினோஜன் | 84 | காத்தார் சின்னக்குளம் அ.த.கபாடசாலை |
| 14 | சிறீசந்திரதாஸ் தர்மிலன் | 96 | கல்நாட்டினகுளம் அ.த.கபா |
| 15 | விவேகானந்தராசாதருனியா | 192 | புதுக்குளம் க.வி |
| 16 | ஞானப்பிரகாசம் கிருஸ்ணரூபன் | 150 | தரணிக்குளம் அ.த.க.பா |
| 17 | கிருஸ்ணமூர்த்திதிவாணி | 161 | சுந்தரபுரம் சரஸ்வதிவி |
| 18 | அழகேஸ்வரன் நுசாலினி | 172 | கிடாச்சூரிகருவேப்பங்குளம் அ.த.க.பா |
| 19 | ராஜேந்திரன் கோவர்சன் | 161 | மறவன்குளம் பாரதிதாசன் வி |
| 20 | திருச்செல்வம் யதுர்சா | 171 | சுந்தரபுரம் அத.க.பா |
| 21 | சிவபாலன் வானிஸா | 129 | மாணிக்கர் இலுப்பைக்குளம் அத.கபா |
| 22 | சதீஸ் அபிசாலினி | 165 | பாலமோட்டைஅ.த.கபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 23 | லோகேஸ்வரன் பிரதாயினி | 159 | கோவில்குஞ்சுக்குளம் அ.த.கபாடசாலை |
| 24 | எட்வேட் தீபிகா | 144 | கல்மடுபடிவம் 2 ,அ.தக. பா |
| 25 | தவசீலன் டேனுஜன் | 143 | பரநட்டகல் அ.த.க.பா |
| 26 | சந்திரசேகரம் ஜினோசிகா | 129 | மரக்காரம்பளை அ.த.க.பா |
| 27 | கவிஞன் சுயாங்கன் | 135 | ஆனந்தகுமாரசுவாமி வி. |
| 28 | இராஜசுந்தரம் சிந்துஜா | 52 | அலைகல்லுபோட்டகுளம் அ.த.க.பா |
| 29 | இரத்தினசாமி இனுசியா | 137 | பாரதிவி.த்தியாலயம் |
| 30 | சத்தியதீபன் சானுஜா | 162 | நொச்சிமோட்டைகனிஸ்ட உ.வி |
| 31 | விக்னேஸ்வரன் ரூபிகா | 147 | கருப்பனிச்சாங்குளம் அ.த.க.பா |
| 32 | டிக்சன் மதுர்சிகா | 167 | தவசியாகுளம் அ.த.கபா |
| 33 | வசந்தராசாதிவ்யன் | 167 | தவசியாகுளம் அ.த.கபா |
| 34 | அ.நதிசா | 168 | சிதம்பரம் ஸ்ரீநாகராஜா வி |
| 35 | சிவபாதவவுனியன் சப்தஹா | 169 | பூவரசங்குளம் ஆரம்பப்பாடசாலை |
| 36 | மோகனகாந் ரோகித் | 166 | கூமாங்குளம் சித்திவிநாயகர் வி |
| 37 | அ.சது | 173 | வ.சண்முகானந்தா ம.வி |
| 38 | செல்வநாதன் யதுசிஹா | 179 | கந்தபுரம் வாணிவி |
| 39 | ரவீந்திரநாதன் கவிநயா | 155 | கற்பகபுரம் அ.த.கபாடசாலை |
| 40 | சிவகுமார் நிதர்சன் | 172 | நொச்சிமோட்டை க.உ.வி |
| 41 | ஹிதாயதுல்லாமுஹமட் மூஆத் | 129 | மதீனாவி |
| 42 | ஜெகதீபன் கிருலக்சன் | 168 | பூம்புகார் கண்ணகிவி |
| 43 | செந்தில்குமரன் செந்தமிழினி | 154 | கோதண்டர்நொச்சிக்குளம் அ.த.க. பா |
| 44 | சிவஞானமூர் த்திநிதுசாலினி | 154 | முருகனூர் சாரதாவித்தியாலயம் |
| 45 | சந்திரசேகரம் ஜினோசிஹா | 129 | மறக்காரம்பளைஅ.த.கபாடசாலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி மாணவர்களின் பெயர் விபரம்

| இல | மாணவர் பெயர் | முன்பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 01 | சூரியகுமார் நேருஜா | உமையவள் முன்பள்ளி |
| 02 | அஞ்சன் றக்ஷிகா | அன்னைதெரேசாமுன்பள்ளி |
| 03 | இர்சாந் சீமா ஹஸ்ரீன் | பெரியார் முன்பள்ளி |
| 04 | டினேஸ்காந் காசினி | கலைமகள் முன்பள்ளி |
| 05 | டிசாந்தினிகணேசன் | மலரும் அரும்புகள் முன்பள்ளி |
| 06 | ரமணன் அபிஷன் | திருமகள் முன்பள்ளி |
| 07 | கபிஸ்ரா சமன்குமார | சுந்தரேஸ்வரிஅம்மன் முன்பள்ளி |
| 08 | பிரகாசஞானம் அஷ்வின் | ஜேசுபுரம் முன்பள்ளி |
| 09 | சுரேந்திரன் அன்பரசி | சமாதானசிறார்கள் முன்பள்ளி |
| 10 | விஜயச்சந்திரன் ஜெருஷா | வாணிமுன்பள்ளி |
| 11 | சிவசுதன் வேணுஜா | பாரதிமுன்பள்ளி |
| 12 | இராயப்பன் விதுவினா | தூயபற்றிமாமாதாமுன்பள்ளி |
| 13 | வி.கவிஷா | முத்தமிழ் முன்பள்ளி |
| 14 | ரவிதேனுஜா | தரணிச்சுடர் முன்பள்ளி |
| 15 | ஜனகறிரோசன் லோகித் | விநாயகர் முன்பள்ளி |
| 16 | கா.டேனுஜன் | விண்மீன் முன்பள்ளி |
| 17 | ஜோ.பியூலா | உதயசூரியன் முன்பள்ளி |
| 18 | செ.தயாளினி | நவஜோதிமுன்பள்ளி |
| 19 | ராஜேந்திரன் டக்ஷான் | செந்தமிழ் முன்பள்ளி |
| 20 | கிருஸ்ணகுமார் டனுசி | விவேகானந்தாமுன்பள்ளி |
| 21 | கிரிதாஸ் ரக்சிதன் | பாலவிநாயகர் முன்பள்ளி |
| 22 | ந.கிஷானி | வளர்மதிமுன்பள்ளி |
| 23 | ஆ.லகீசா | புனிதபவுல் முன்பள்ளி |
| 24 | ஆ .பாத்திமாஜீனற் | நல்லபிள்ளைமுன்பள்ளி |
| 25 | ச.தேஜஸ் | கணேசாமுன்பள்ளி |
| 26 | வி.ஏக்சிபா | ஐங்கரன் முன்பள்ளி |
| 27 | து.வேணிலகன் | நெளுக்குளம் பாலர் பாடசாலை |
| 28 | டி.ஹாசினி | கலைமகள் முன்பள்ளி |
| 29 | ந.ரேணுஜன் | சரஸ்வதிமுன்பள்ளி |
| 30 | கு.தாருஜன் | சின்னத்தம்பனைமுன்பள்ளி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 31 | த.தவச்செல்வி | பிரதேச சபை முன்பள்ளி |
| 32 | ர.டனுசிகன் | கோவில்குஞ்சுக்குளம் முன்பள்ளி |
| 33 | ந.கருசனா | தென்னிந்தியதிருச்சபைமுன்பள்ளி |
| 34 | தே.சங்கீத் | இளந்தளிர் முன்பள்ளி |
| 35 | செ.கலைச்செல்வி | புனிதசவேரியார் முன்பள்ளி |
| 36 | கொ.மிலேனா | பாரதிமுன்பள்ளி |
| 37 | ஸ்ரீ.மீரா | அன்னைதெரெசாமுன்பள்ளி |
| 38 | க.பவின் | அபிராமிமுன்பள்ளி |
| 39 | ஜெயந்தன் கிசாந்தன் | வாணிமுன்பள்ளி |
| 40 | அ. சகீஸ்னா | நாவலர் முன்பள்ளி |
| 41 | ஆ.துவிசன் | முத்தமிழ் முன்பள்ளி |
| 42 | தி.கிசான் | சரஸ்வதிமுன்பள்ளி |
| 43 | சு.டிசாந்தி | மெதடிஸ் முன்பள்ளி |
| 44 | ய.பகீர்தரன் | இளந்தளிர் முன்பள்ளி |
| 45 | ச.அபிநயா | ஜெபஆலயமிசன் முன்பள்ளி |
| 46 | மோ.டர்மிஹா | சென்லூக் முன்பள்ளி |
| 47 | சானுசப்திஅகமட் | ரகுலத்துள் ஜின்னாமுன்பள்ளி |
| 48 | பு.அனுசாந் | மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி |
| 49 | க.கஜேந்தினி | மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி (மதுராநகர்) |
| 50 | ச.அனுசிகன் | கம்பர் முன்பள்ளி |
| 51 | சு.சுருதிஹா | தமிழேந்திமுன்பள்ளி |
| 52 | ச.சபிசாளினி | மாதர்மொனிக்காமுன்பள்ளி |
| 53 | ந.தனுசிகன் | விநாயகர் முன்பள்ளி |
| 54 | சு.டினுஜன் | அம்புஜமுன்பள்ளி |
| 55 | செ.கிசாந்தினி | இளந்தளிர் முன்பள்ளி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்பு மாதம் 2019 இல் நிறந்தீட்டல் போட்டியில் முதலிடம் பெற்ற சித்திரம்

செல்வன். கவீந்தன் யஷ்மி
அன்னை தெரேசா முன்பள்ளி,
புதிய கற்பகபுரம் ,பம்மைமடு வவுனியா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா தெற்கு தமிழ்பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டுவரும் இடங்கள் சில.


நூலகம் – குமாரங்குளம்


நூலகம் – ஓமந்தை


ஆயுள்வேத நிலையம் – ஓமந்தை


ஆயுள்வேத நிலையம் – மணிபுரம்



வன்னி அறுசுவையகம் – ஓமந்தை


முன்பள்ளி – ஓமந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுற்றுலா மையம் - கல்நாட்டினகுளம்



சுற்றுலா மையம் - பெரியகோமரசன்குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வாசிப்புமாதம் 2019ம் ஆண்டுக்கான நிகழ்வுகளின் பதிவுகள் சில..











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த உள்ளூர் எழுத்தாளர்

**படைப்பின் சில துளிகள்**

- பெயர் - சுப்பிரமணியம் வரதகுமார்
- துறை - கவிதை
- கல்வித்தகமை -உளவியல்,நாடகமும் அரங்கியலும் (BA Hons, PHD உளவியல்)

**வெளியீடுகள்**

நூல்கள்

- கலைந்த தேனீக்கள்-கவிதைத்தொகுப்பு
- சிந்தித்தால் துன்பமில்லை (சிறுவர் கதை - தேசியமட்டவிருது)
- மனவடுக்கல் (கவிதைத்தொகுப்பு- (தேசியமட்டவிருது)
- மனமே பேசு (நாடகத்தொகுப்பு)
- எதுவரை- விமர்சனநூல்

குறும்படம் -

- காப்பு
- எதிர்பார்ப்பு – வடமாகாணம் முதலிடம்
- அந்த நிலா
- ஒடிந்த சிறகு
- தவிப்பு
- கருகத்திருவுளமோ

நாடகம் -

- நல்லதோர் வீணை செய்து
- என்று தணியும்
- மனமே பேசு - தேசியமட்டவிருது
- எங்கள் நாடு - தேசியமட்டவிருது
- மனக்குடை உட்பட 24 நாடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org